Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Soft View Computer Systems
For all your Computer Requirements
Computer Assembling & Sales
Maintenance, Repairing & Networking
Monitors, Printers, Scanners & UPS Repairing
Software Installations
CD Writing & Printing
No.778, Thaddatheru Junction, K.K.S Road, Jaffna, Sri Lanka
(சி-068)
021-2225170

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 19 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷஃபான் 29 (05.11.2002) செவ்வாய்க்கிழமை இதழ் : 36

## ஓடித் திரிந்தது ஒட்சிசன் சிலிண்டர்! தாதியின் கால் முறிந்தது; 4 பேர் காயம்!

### அவசர சிகிச்சைப் பிரிவில் களேபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் நேற்றுக்காலை திடீரென அல்லோல கல்லோலம் ஏற்பட்டது. இப்பிரிவில் இருந்த ஒட்சிசன் சிலிண்டர் ஒன்றின் மூடி தவறுதலாகக் கழன்று விட்ட நிலையில் வாயு அமுக்கத்தினால் அச்சிலிண்டர் திடீரென வேகமாக நகரத் தொடங்கியது. வேகமாக அங்குமிங்குமாக நகர்ந்த அந்த சிலிண்டர் அங்கு கடமையிலிருந்த தாதி ஒருவரின் காலையும் முறித்தது. சிகிச்சை நிலையச் சுவர்களையும் இடித்து சேதப்படுத்தியது.

சிலிண்டர், வாயுவை வேகமாக வெளியேற்றியவாறு நகரத் தொடங்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கலகலப்பாகக் கழிந்தது தீபாவளி; கோஷ்டி மோதலுக்கும் குறைவில்லை!


(யாழ்ப்பாணம்)

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் நேற்றைய தீபாவளித் திருநாள் மிகவும் கலகலப்பாக கழிந்தது.

யாழ்.நகரிலும் குடாநாட்டின் ஏனைய புறநகர்ப் பகுதிகளிலும் மக்கள் மத்தியில் நேற்றைய தீபாவளித் திருநாளையொட்டி விறுவிறுப்புடன் கூடிய குதூகலத்தை அவதானிக்க முடிந்தது.

இதேநேரம், வழமைக்கு மாறாக நேற்று யாழ். குடாநாட்டில் வீதி விபத்துக்கள் அதிகமாகக் காணப்பட்டன. இவ்விபத்துக்கள் காரணமாகப் பலர் காயமடைந்தும் உள்ளனர். இவற்றை விட மதுபோதையில் பலர் முட்டிமோதி காயப்பட்ட சம்பவங்களும் நடைபெற்றுள்ளன. யாழ். ஐந்து சந்திப்பகுதியில் நேற்று இருவேறு கோஷ்டியினருக்கு இடையில் நடைபெற்ற மோதலில் பலர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இவை போன்ற மோதற் சம்பவங்கள் பல ஏனைய பகுதிகளிலும் (10ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணானம் விநாசியர்



ஆஸ்பத்திரிக்குள்ளயும் தீபாவளி ஞாபகத்துல சக்கரவானம் விட்டவையளோ...?

# ஆயுதக் கொள்வனவு மோசடி; ஜனாதிபதி மீது நேரடி விசாரணை!

## பாதுகாப்பமைச்சர் மாரப்பன உத்தரவு

(கொழும்பு)

**பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைகேடான ஆயுதக் கொள்வனவுகள் பற்றிய விசாரணைகளை துரிதப்படுத்தவும், இதன் மூலம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த ஆகியோர் மீது நேரடி சட்ட விசாரணைகளைக் கொண்டு வரவும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

கடந்த அரசாங்க காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆயுதக்கொள்வனவு பற்றிய விசாரணைகளை உடனடியாக இரகசியப் பொலிஸார் (சி.ஐ.டி) மீள மேற்கொள்ள வேண்டுமென பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன உத்தரவிட்டுள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி காலத்தில் மேற்கொள்ளப்பட்ட,

(10ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன், கருணா நாளை வன்னி வருவர்!

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் தாய்லாந்தில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட, அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனும், கேணல் கருணாவும் மற்றும் அவர்களுடன் சென்ற மூன்று உறுப்பினர்களும் நாளை வன்னி திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டுநாயக்க விமான நிலையம் வரும் இவர்கள், ஹெலிகொப்டர்கள் மூலம் கிளிநொச்சி செல்வார்கள் என்றும் தமிழ்ச்செல்வனும், கருணாவும் பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகளை விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு விளக்குவார்கள் என்றும் அறியப்படுகின்றது.

இதேவேளை - பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்ட புலிகளின் பிரதிநிதிகளான உருத்திரகுமார் அமெரிக்காவுக்கும், பொருளாதார அபிவிருத்தி நிபுணர் ஜோய் மகேஸ்வரன் அவுஸ்திரேலியாவுக்கும், கலாநிதி பாலசிங்கம் லண்டனுக்கும் பயணமாகியுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேசமயம், தாய்லாந்தில் இரண்டாவது கட்டப் பேச்சுக்களை முடித்துக்கொண்டு அரச தரப்புப் பிரதிநிதிகள் குழுவில் இடம்பெற்றிருந்த அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், ரவூப் ஹக்கீம் ஆகியோர் நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் கட்டுநா

(10ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் நடவடிக்கைகளே ராணுவத்தை பலவீனமாக்கும்

### ஜனாதிபதியின் முடிவு அல்ல என்கிறார் மங்கள



(கொழும்பு)

இராணுவத்தின் எட்டு மேஜர் ஜெனரல் தர அதிகாரிகளுக்கு சேவை நீடிப்பு வழங்க ஜனாதிபதி மறுத்துள்ளமை, ஒரு போதும் இராணுவத்தை பலவீனமாக்காது என முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

எட்டுப் படை அதிகாரிகளும் பதவி விலகுவதால் இராணுவம் பலவீனமடையும் என புலிகள் தரப்பில் கூறப்பட்டதாக, நேற்றைய 'திவயின' சிங்கள நாளிதழ் வெளியிட்ட தலைப்புச் செய்தி தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு மிலேனியம் சிற்றிப் பகுதியில் இராணுவ ஊடுருவித் தாக்குதல் அணியின்

(10ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் குடியிருப்புக்களில் தங்கியுள்ள படையினரே அமைதிக்கு முட்டுக்கட்டை!

### நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் விநாயகமூர்த்தி



(யாழ்ப்பாணம்)

"முழுமையான இயல்புநிலையை ஏற்படுத்துவதற்கு அரசு முழுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக உயர் பாதுகாப்பு வலயம் அகற்றப்பட வேண்டும். பொதுமக்களின் குடியிருப்புக்களிலிருந்து படையினரும் படை முகாம்களும் அகற்றப்பட வேண்டும். இவைகள்தான் தற்போது இயல்புநிலை தோன்றுவதற்கு முட்டுக்கட்டையாக உள்ளன. எனவே, அரசாங்கம் இவ்விடயத்தில் உடனடியாக செயற்பட்டு இயல்புநிலையை தோற்றுவிக்க வேண்டும்"

- இவ்வாறு தமிழ் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான அ.விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

நேற்று மாலை கூட்டப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## பஜிரோ வாகன விபத்தில் கஜேந்திரகுமார் காயம்!

### கரடிப்போக்குச் சந்தியருகே சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பொ.கஜேந்திரகுமார் வாகன விபத்துக்குள்ளானார்.

கிளிநொச்சியில் கரடிப்போக்குச் சந்திக்கு அண்மையில் நேற்றுக் காலை நிகழ்ந்த இவ்வாகன விபத்தில் அவர் சிறுகாயமடைந்தார்.

அவர் பயணஞ்செய்த பஜிரோ இன்ரகூலர் வாகனம் கரடிப்போக்கு வாய்க்காலுக்குள் விழுந்து பலத்த சேதத்துக்குள்ளாகியது.

(க)

## பௌத்த பீடாதிபதிகளை அமைச்சர் பீரிஸ் சந்தித்தார்

### சமாதானப் பேச்சுகள் குறித்தும் விபரிப்பு

(கொழும்பு)

தாய்லாந்து பேச்சுக்களை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பிய அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று மாலை அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகளை சந்தித்தார். மரியாதை நிமித்தம் நடைபெற்ற இச்சந்திப்பின் போது அரசும் - புலிகளும் விட்டுக் கொடுத்துச் செயற்படுவதை அஸ்கி

(10ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
சர்வதேச சேவையில் உள்ள நாங்கள் உங்கள் உள்நாட்டுச் சேவையிலும்
(சி-148)
J/FT/P - 021 - 2223916, 0777 - 801038, CMB/ 505632

வடக்கு - கிழக்கு மாகாண

# பிரதம செயலர் நியமனத்தை எதிர்த்து நீதிமன்றில் வழக்கு

(திருமலை நிருபர்)

வட, கிழக்கு மாகாண பிரதம செயலாளராக (பதில்) நியமிக்கப்பட்டுள்ள ரங்கராஜாவின் நியமனம் தொடர்பாக மனித உரிமை மீறல் வழக்கொன்று - கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கினைத் தாக்கல் செய்த விவசாயத் திணைக்களப் பணிப்பாளரான சண்முகலிங்கம் - தம்மை விட 7 வருட சேவைக்கால அனுபவம் குறைந்த ரங்கராஜாவை நியமனம செய்ததன் மூலம் தனக்கான வாய்ப்பு நிராகரிக்கப்பட்டுவிட்டதாகக் குறிப் பிட்டுள்ளார்.

இந்நியமனம் பற்றி - தமிழர் கூட்டமைப்பு எம்.பிக்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முறையிட்டபோதும், ஆளுநர் - ஜனாதிபதியின் சம்மதத்துடன் இந்நியமனத்தை வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.



பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரப் பெண்கள் பாடசாலையில் நடைபெற்ற மரம் நாட்டும் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கி யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ்.நடராசலிங்கம் கல்லூரி வளவில் மரம் நாட்டி வைப்பதைப் படத்தில் காணலாம். (17)

## காலாவதியான பொருட்களை விற்ற வர்த்தகர்கள் மீது நீதிமன்றில் வழக்கு

(சரசாலை)

காலாவதியான பொருட்களை விற்பனை செய்த கொடிகாமம் வர்த்தகர்களிற்கு - சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் அபராதம் விதித்ததோடு எச்சரிக்கையும் செய்து அனுப்பினார்.

மேற்படி வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருட்களை விற்பனை செய்தோரைக் கண்டுபிடித்த - பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நிர்மலானந்தனால் இவர்கள் மீது சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (34)

### காரைநகரில் மீளக் குடியேறியோருக்கு உதவித் தொகை

(காரைநகர்)

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் காரைநகரில் மீளக்குடியமர்ந்த - பிட்டியெல்லை, தோப்புக்காடு போன்ற கரையோரப் பிரதேச மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மீளக் குடியமர்வு உதவித் தொகை வழங்கப்படவுள்ளது.

இதற்காக ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (52)

## யன்னல் கம்பியை வெட்டி உட்புகுந்த திருடரால் தாலிக்கொடி அபகரிப்பு!

(ஆவரங்கால்)

வீட்டு யன்னல் கம்பிகளை வெட்டி அதன் வழியாக உட்சென்ற திருடர்கள் - அங்கு உறக்கத்திலிருந்த பெண்ணின் கழுத்திலிருந்த 13 பவுண் தாலிக்கொடியை அறுத்துச் சென்ற சம்பவமொன்று அச்சுவேலி வடக்கில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் சதீஸ்குமார் அகிலா என்பவரது தாலிக்கொடியே களவாடப்பட்டது. இது தொடர்பாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக அச்சுவேலிப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (80)

## பருத்தித்துறையில் கட்டாக்காலி நாய்கள் கடிக்கு இலக்காவோர் தொகை அதிகரிப்பு

(புலோலி)

பருத்தித்துறைப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் கடிக்கு இலக்காகுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

பருத்தித்துறை மீன் சந்தை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில்- கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் பொது மக்கள் அப்பகுதியில் நடமாட அச்சமடைந்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை மட்டும் இப்பகுதியால் சென்ற துறைமுகத் தொழிலாளர்களான ஞானராசா (வயது 50), நடராசா (வயது 55), சுந்திரலிங்கம் (வயது 40), ஆனந்தகுமார் (வயது 35) ஆகியோர் நாய்க் கடிக்கு இலக்காகியுள்ளனர்.

இது குறித்து பொதுமக்களால் பருத்தித்துறை நகராட்சி மன்ற அதிகாரிகளிடம் பலமுறை முறைப்பாடுகளைத் தெரிவித்திருந்தும் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எதையும் அவர்கள் மேற்கொள்ளாமல் இருப்பதாகப் பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (15)

## 40 குடும்பங்களுக்கு நுளம்பு வலை விநியோகம்

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன், குப்பிளான், ஈவினைப் பகுதிகளில் அண்மையில் வன்னியிலிருந்து வந்து மீளக்குடியமர்ந்த 40 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

இப்பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பணிமனையில் வைத்து, சுகாதாரப் பரிசோதகர் வி.மோகன்ராஜாவால் - 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் உள்ள குடும்பத்தினருக்கு முன்னுரிமை அடிப்படையில் இவை வழங்கப்பட்டன. (83)

## தென்மராட்சி வலயத்தில் இலவச கணினிக் கருத்தரங்குகள்

(சாவகச்சேரி)

தமிழ்த் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பின் இலவச கணினிக் கருத்தரங்குகள் 6ஆம், 7ஆம் திகதிகளில் தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் நடைபெறவுள்ளன.

இதற்கென சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இவ்வமைப்பினரின் முதற் கட்டக் கருத்தரங்கு வன்னியிலும் இரண்டாம் கட்டக்கருத்தரங்கு தீவகத்திலும் நடந்து முடிந்த நிலையில் மூன்றாம் கட்டக் கருத்தரங்கள் தென்மராட்சியிலும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (29)

### மிருசுவிலில் முன்பள்ளி இல்லம்

(சரசாலை)

மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள மிருசுவில், கெற்பலி கிராமத்தில் - இதுவரை முன்பள்ளி மீள இயக்கப்படாமையால் இப்பகுதிச் சிறுவர்கள் தூர இடங்களிற்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இடப்பெயர்வுக்கு முன்னர் இப்பகுதியில் உள்ள சனசமூக நிலையம் ஒன்றில் முன்பள்ளி - நடத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (34)

### கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டை

ஆனந்தபுரம் புதிய செம்மணி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவபாலரட்ணம் தனபாலசிங்கம் என்பவருடைய விசேட அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## கொழும்பு நகரில் காகங்கள் உயிரிழப்பு

(கொழும்பு)

நூற்றுக்கணக்கான காகங்கள் அண்மையில் கொழும்பில் சில மணி நேரத்தில் இறந்துள்ளன.

ஜனாதிபதி அலுவலகம், அமெரிக்கத் தூதரகம், ஹோல்பேஸ் மற்றும் நிதியமைச்சு அமைந்துள்ள பிரதேசங்களிலே திடீரென இந்தக் காகங்கள் இறந்துள்ளன.

இதற்கான காரணத்தை உடனடியாகக் கண்டறிய முடியவில்லை என்று கொழும்பு மாநகர சபை வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இறந்த காகம் ஒன்று கொழும்பு மருத்துவ ஆய்வுகூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## கால்நடைகளைப் பிடிப்பதற்கு தீவகத்தில் தடை விதிப்பு

(மண்கும்பான்)

மண்கும்பான், அல்லைப்பிட்டி, வேலணை உட்பட ஏனைய தீவுகளில் கட்டாக்காலி கால்நடைகளைப் பிடித்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் ஆட்களற்ற காணிகளில் காணி உரிமையாளர் அனுமதி பெறாமல் உட்சென்று பயன்பெறல், பயன்தரு மரங்களை தீயிட்டு அழித்தல், அனுமதியின்றி மரங்களைத் தறித்தல் என்பவற்றை முற்றாக நிறுத்துமாறும் சுற்றுச் சூழல் பாதுகாப்புப் பிரிவினர் எச்சரித்துள்ளனர். (53)

## இன்றைய நாள் இனிய நாள்

**05.11.2002 - செவ்வாய்க்கிழமை**

**மேடம்** :- மனமகிழ்ச்சி, தெய்வ வழிபாடு, பணவரவு, பெண்கள் மகிழ்ச்சி, கௌரவம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**இடபம்** :- எதிரிகளின் தொல்லை, கௌரவக் குறைவு, கடன் பிரச்சினை, மனைவியின் தேக சுகம் பாதிக்கப்படல், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றக் குறைவு.

**மிதுனம்** :- பணவரவு, பொதுச் சேவையில் கௌரவம், தொழில் முன்னேற்றம், வயிற்றில் அஜீரணம், புத்திர மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- மாதா தேகசுகக் குறைவு, வைத்தியச் செலவு, உறவினர் வருகை, வாகனப் பலன், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**சிங்கம்** :- மனமகிழ்ச்சி, எடுத்த காரியம் வெற்றி, பணவரவு, தேவையற்ற செலவு, குடும்பத்தில் சிறிய சச்சரவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கன்னி** :- பணவரவு, கதை வசீகரத்தினால் நன்மை பெறுதல், தொழில் சிறப்பு, காயமேற்படல், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

**துலாம்** :- மகிழ்ச்சி, விருந்தினர் ஒன்று கூடுதல், பெண் மகிழ்ச்சி, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- தேகசுகக் குறைவு, தேவையற்ற செலவு, உடலில் காயமேற்படல், அயலவர்களில் உறவு பேணப்படல் வேண்டும், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம் குறைவு.

**தனு** :- மனமகிழ்ச்சி, செய்தொழில் இலாபம், தெய்வ தரிசன பலன், வாகனப் பலன், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மகரம்** :- தொழில் முன்னேற்றம், தெய்வ சேவையில் மதிப்பு, சமய அறிஞர் உறவு, மன நிறைவு, சிறிய தேகசுகக் குறைவு, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமம்.

**கும்பம்** :- திடீர் பணவரவு, தெய்வ தரிசன பலன், தர்மச் செலவு, பிதா மகிழ்ச்சி, சிறிய காயமேற்படல், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மீனம்** :- தேக சுகக் குறைவு, புதிய காரியங்களில் ஈடுபடுவது நன்றல்ல, மற்றவர்களுக்கு உதவி செய்யும் சிந்தனை, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.


ராஜா
யாழ்ப்பாணம்.

தீபாவளி வெளியீடு
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
வில்லன்
காட்சிகள்: 10.30, 2.30, 6.00
இயக்கம்: K.S.ரவிக்குமார்.

நிறஞ்சனாஸ்
சங்கானை
05-11-2002 தொடக்கம்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00
விஜய், சிம்ரன் நடித்த
துள்ளாத மனமும் துள்ளும்
சனி, ஞாயிறு மட்டும்
இரவு 8.45 காட்சி
"FINAL FIGHT"
(சி-139) (கராட்டிப் படம்)

நரேன் வீடியோ அன் போட்டோ
தலைமையகம் - நாவற்குழி, கைதடி.
கிளை - 309, அரசடி வீதி, நல்லூர்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
அதிநவீன கணினி மிக்சர் மூலம்
சிறந்த முறையில் வீடியோ
(சி-146) படம்பிடித்திடலாம்.

பவானி விலாஸ்
சக்தி BAVANI VILAS
கச்சான் அல்வா, பருப்பு, இனிப்பு, டொபி, தயாரிப்பாளர்
தரமான பொருட்களை மலிவான விலைகளில் பெற்றுக்கொள்ள நாடும் இடம
பவானி விலாஸ் கச்சான் அல்வா தொழிலகம்
உரிமையாளர்: எஸ்.தனராஜா.
32/1, College Street, Jaffna. T.P.No.:222 3138.
32/1, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி

புங்குடுதீவு, பெருங்காடு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க உப தலைவரும் புங்குடுதீவு பெருங்காடு தெற்கு விவசாய சம்மேளனத் தலைவருமாகிய

### நாகமணி கருணானந்தசிவம்

அவர்களின் மரணச்செய்திகேட்டு ஆழ்ந்த துயரமடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

புங்குடுதீவு பெருங்காடு தெற்கு
கிராம அபிவிருத்திச்
சங்கம்.

3ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.
(023)

# குடாநாட்டில் கண்ணிகள் அகற்றுதல் இனிமேல் ஒருங்கிணைந்த வகையில்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வெடிபொருட்களை அகற்றும் நடவடிக்கையை ஒருங்கிணைந்த வகையில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் படவிருக்கிறது.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் விதைக்கப்பட்டிருக்கும் வெடி பொருட்களை அகற்றுவதற்காக பல செயற்திட்டங்கள் வகுக்கப்பட் டுள்ளன. அத்துடன் மேற்படி கண்ணிவெடி அகற்றும் சேவையில் மூன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் ஈடுபட்டும் வருகின்றன.

இவ்வாறு பல நிறுவனங்கள் சேவையில் ஈடுபட்டிருப்பதால் இவற் றுக்கிடையே ஒருவகையான ஒருங்கிணைப்பு அவசியம். ஆனால், இது வரை காலமும் இவ்வாறான ஒருங்கிணைப்பு எதுவும் ஏற்படுத்தப்பட வில்லை.

இதனால் மேற்படி பணியில் ஒரு குழப்பமான நிலைமை காணப் படுகிறது. இவ்வாறான நிலைமையைத் தவிர்ப்பதற்காகவே கண்ணி வெடி அகற்றும் பணியில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளது. (க)

## ஸ்கந்தாவில் நினைவுப் பேருரை

(கந்தரோடை)

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபரும், பேரறிஞருமாகிய அமரர் வி.சுப்பிரமணியம் அவர்களின் 6 ஆவது ஞாபகார்த்த நினைவுப் பேருரை நாளைக் காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் க.சிவாஜி தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பேராசிரியர் எஸ். இராசதுரை "வடமாநிலத்தில விவசாய அபிவிருத்தி" என்னும் விடயமாக பேருரையை நிகழ்த்தவுள்ளார்.



கோப்பாய் லயன்ஸ் கழக ஆதரவில், யாழ். மத்திய கல்லூரி 12 வயதுக்குட்பட்ட அணியினருக்கும், வேம்படி மகளிர் கல்லூரியின் அணி வீராங்கனைகளுக்குமான உதைபந்தாட்டக் காட்சிப் போட்டி அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம்.

## நிமால் - குமார் - ரோகணகுமார படுகொலைகள் மேலதிக சட்ட நடவடிக்கை குறித்து ஆராய்வு!

(கொழும்பு நிருபர்)

ஊடகவியலாளர்களான மயில்வாகனம் நிமலராஜன், ரோகண குமார மற்றும் குமார் பொன்னம்பலம் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்குகளை மேற்கொண்டு எவ்வாறு முன் நகர்த்தலாம் என சட் டமா அதிபர் ஆராய்ந்து வருகின்றார்.

இம்மூன்று படுகொலைகளுடனும் சம்பந்தப்பட்டதாக சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்ட பலர் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் இம்மூன்று வழக்குகளின் விசாரணைகளும் மந்தகதியை அடைந்துள்ளன.

இதனைக் கருத்திற்கொண்டே சட்டமா அதிபர் இந்த வழக்குகளை எவ்வாறு முன்னேற்றமான கட்டத்தை நோக்கி நகர்த்தலாம் என்பது குறித்தும் மேலதிக சட்ட நடவடிக்கைகளை எடுப்பது குறித்தும் ஆராய்ந்து வருகின்றார்.

விரைவில் இந்த மூன்று வழக்கு விசாரணைகளையும் துரிதப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் சட்டமா அதிபரின் திணைக்களம் மேற்கொள்ளும். இம்மூன்று படுகொலைகளின் விசாரணைகள் தொடர்பாக சர்வ தேசரீதியில் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுவருவதால், விசாரணைகளைத் துரிதப்படுத்தும் முயற்சியில் அரசாங்கம் இறங்கியுள்ளது.

## 1996 இற்குப் பின்னர் குற்றப்பணத்தால் அரசுக்கு 14 கோடி ரூபா வருமானம்!

(கொழும்பு நிருபர்)

1996ஆம் ஆண்டு முதல் நாட் டில் இடம்பெற்றுவரும் குற்றச்செயல் களால் அரசாங்கத்துக்கு 14 கோடி ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக உள்துறை அமைச்சின் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த பல வருடங்களாக நாட் டில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருகின்றன. இந்தக் குற்றச் செயல் களைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற் கொண்டிருந்தது. எனினும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்து வதில் பெரியளவிலான முன்னேற் றம் எட்டப்படவில்லை என உள் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் கொழும்பு வடக்கில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒரு வரின் தலைமையில் நடமாடும் பொலிஸ்குழுவொன்றை பணியில் அமர்த்துவதற்குத் திட்டமிடப்பட் டுள்ளது. இத்திட்டம் கொழும்பின் ஏனைய பகுதிகளுக்கும் விஸ் தரிக்கப்படும்.

இதேவேளை, குற்றச்செயல் களை கட்டுப்படுத்த அரசாங்கம் கடும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. அதேவேளை, 1996 ஆம் ஆண்டுமுதல் இவ்வாண்டு வரையான காலப்பகுதியில் குற்றச் செயல்களால் அரசாங்கத்துக்கு 14 கோடி ரூபா வருமானம் கிடைத் துள்ளதாக உள்துறை அமைச்சு மதிப்பிட்டுள்ளது.

குற்றச்செயல்களில் சம்பந்தப்பட் டோரிடம் இருந்து அறவிடப்பட்ட குற்றப்பணமாகவே இந்த நிதி அர சுக்கு வருமானமாகக் கிடைத்துள் ளமை குறிப்பிடத்தக்கது.

## திருமலையில் நீதிமன்றங்களை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை!

(திருகோணமலை)

திருகோணமலையில் தொழில் நீதிமன்றம், நிரந்தர மேல் நீதிமன்றம், சுற்றுலா மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பவற்றை அமைப்பதற்கான துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்நீதிமன்றங்களைச் செயற்பட வைப்பதற்கான கட்டடங்களை நிர் மாணிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இது தொடர்பான நடவடிக்கைகளை நேரில் கவனிப்பதற்காக உயர் நீதிமன்ற நீதியரசர் அமீர் இஸ்மாயில், நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் குணதிலக ஆகியோர் கடந்தவாரம் திருகோணமலைக்கு விஜயம் செய்திருந்தனர்.



தாய்லாந்துப் பேச்சின் நிறைவாகவும், நினைவாகவும் மரம் நடும் பாலா, ஹெல்கிஸன், பீரிஸ் ஆகியோரின் இன்னொரு காட்சி.

## கட்டைக்காடு-வெற்றிலைக்கேணி பகுதிகளில் 200 வீடுகளை நிக்கொட் நிறுவனம் அமைக்கும்

### பயனாளிகளைத் தெரிவுசெய்யும் பணி ஆரம்பம்

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கட்டைகாடு, வெற்றிலைக்கேணி ஆகிய கிராமங் களில் 'நிக்கோட்' திட்டத்தின் கீழ் 200 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட வுள்ளது. மீளக்குடியமர்ந்த மக்களி டையே பயனாளிகளை தெரிவுசெய் யும் வேலைகள் தற்போது நடைபெறு வதாகவும், பயனாளிகள் தெரிவுசெய் யப்பட்டதும் வீடுகள் கட்டிக் கொடுக் கப்படும் எனவும் தெரியவருகிறது.

கட்டைகாட்டில் 125 வீடுகளும், வெற்றிலைக்கேணியில் 75 வீடுகளும கட்டிக்கொடுக்கப்படுமென வடம ராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையைச் சேர்ந்த ஒரு அதிகாரி தெரிவித்தார். (17)

## பூநாறிமரத்தடி விபத்தில் சைக்கிளில் சென்றவர் காயம்!

(யாழ்ப்பாணம்)

பூநாறி மரத்தடிச் சந்திக்கும் நாச்சிமார் கோவிலடிக்கும் இடை யில் ஓட்டோ- துவிச்சக்கர வண்டி விபத்தொன்று நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்று கொண்டிருந்த ஓட்டோ ஒன்று யாழ்ப் பாணம் நோக்கி சைக்கிளில் வந்து கொண்டிருந்தவருடன் மோதி விபத்து ஏற்பட்டது.

இவ்விபத்தில் துவிச்சக்கரவண் டியில் வந்த உடுவிலைச் சேர்ந்த சற்குணராசா (வயது 40) என்பவர் தலையில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார். (108)

## மன்னார் - மதவாச்சி முன்னரங்க நிலைகளுக்கருகில் விவசாயச் செய்கைக்குப் படையினர் அனுமதி மறுப்பு!

(வவுனியா)

மன்னார்-மதவாச்சி வீதியில் இராணுவ முன்னரங்கக் காவலரண்களுக்கு முன்பாக நெற்செய்கையில் ஈடுபடப் படையினர் தடைவிதித்துள்ளமை தொடர்பாக மன்னாரில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடத்தப்பட்டது.

மன்னார் மாவட்ட இராணுவ கட்டளை அதிகாரி, வன்னிப் பகுதிக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்கப் பேராயர் மேதகு இராயப்பு யோசப் ஆகியோர் உட்படப் பலர் இக்கூட்டத்தில் பங்கு பற்றியிருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளரும் கலந்துகொண்டிருந்தார். முன்ன ரங்க நிலைகளில் இருந்து 500 மீற்றருக்கு உட்பட்ட பிரதேசத்தில் நெற்செய்கைக்குப் படையினர் அண் மையில் தடைவிதித்திருந்தனர்.

யுத்த காலத்தில் முன்னரங்க நிலப்பகுதிவரை விவசாயத்தில் ஈடுபட அனுமதித்த படையினர் சமாதா னச் சூழலில் மறுத்துவருவது குறித்து, இக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டபோதும், 300 மீற்றருக்குட்பட்ட பிரதேசத்தில் விவசாயச் செய்கையில் ஈடுபடப் படைத்தரப்பு அனுமதி மறுத்துவிட்டது.

இதனால் இக்கூட்டம் முடிவேதும் எட்டப்படாமல் முடிவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நிலத்தைக் கொத்திய விவசாயி திடீரென மயங்கி வீழ்ந்து மரணம்!

(பருத்தித்துறை)

பருத்தித்துறை காந்தியூரில் விவசாயி ஒருவர் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது திடீ ரென மயங்கி விழுந்து மரணமடைந் துள்ளார்.

பருத்தித்துறை காந்தியூரை சேர்ந்த சி.கருணாகரன் (வயது 33) என்ற இளம் குடும்பஸ்தரே தனது வயலில் நேற்று முன்தினம் மண் வெட்டியால் நிலத்தைக் கொத்திக் கொண்டிருக்கும்போது திடீரென மயங்கி விழுந்து ஸ்தலத்திலேயே மரணமடைந்தவராவார். (15)

# சுயநிர்ணயத்தை சுயலாபத்திற்காகக் கையாளும் தேசிய எல்லை கடந்த கம்பனிகளும், வல்லரசுகளும்



மைக்ரோ சொப்ற் நிறுவனத்தின் தொழிலதிபர் பில் கேட்ஸ்.

சுயநிர்ணயம் என்பது தனது தலைவிதியைத் தானே தீர்மானிப்பது என்று மிகவும் சுருக்கமாக வரையறுக்கலாம். சென்ற வாரத் தொடரிலே ஒடுக்கப்பட்ட மக்கள் சுயநிர்ணயம் கோரி நிற்பதற்கு புறம்பாக, தேசிய எல்லைகள் கடந்த கம்பனிகளானது தமது விற்பனையை அதிகரிப்பதற்கான சந்தைத் துண்டங்களை (Market Pieces) தேடித்திரியும்போது, ஏதாவது ஒரு பிரதேசத்தில் அல்லது நாட்டில் இனங்களுக்கிடையில் மதங்களுக்கிடையில் முறுகல் நிலை தோன்றுமிடத்து, அவற்றைத் தீர்ப்பதற்காக சுயநிர்ணயம் என்ற அம்சத்தினை பயன்படுத்தி வருகின்றன என்பதோடு நிறைவு பெற்றிருந்தது.

இந்த வகையில் - வரலாற்று நோக்கில் சுயநிர்ணயம் இரு வகைப்பட்டன என்பதனை இக்கட்டுரைத் தொடரின் 'பகுதி - நான்கில்' பார்த்துள்ளோம்.

அதாவது - இரு துருவ அரசியலில் சோசலிஸ முகாமிற்கு உரிய சுயநிர்ணயம், முதலாளித்துவ முகாமிற்குரிய சுயநிர்ணயம் என இரு வகைப்பாடுகள் ஆராயப்பட்டன.

ஆனால் - இன்று 1990 களின் பிற்பாடு, குறிப்பாக சர்வதேச அரசியல் அரங்கில் அமெரிக்கா தலைமையிலான ஏகதுருவ அரசியலும் மறுபுறத்தில் தேசிய எல்லைகள் கடந்த கம்பனிகளின் சர்வதேச பொருளாதார ஆதிபத்தியமும் நிலை பெற்றிருக்கும் இக்காலப்பகுதியில் - சுயநிர்ணயத்தினை வலியுறுத்தி சோசலிஸ முகாம் வலியுறுத்திய - அதாவது பிரிந்து செல்லக்கூடிய சுயநிர்ணயமும் அதன் செயற்பாடுகளும் மட்டுபடுத்தப்பட்டுள்ளன. (ஆனால் இதற்கு விதிவிலக்கு கிழக்குத் திமோர்)

அதேவேளை - வூட்றோ வில்சனது முதலாளித்துவ முகாமினது உள்ளகப் பரிமாணங்கொண்ட சுயநிர்ணயம் - இன்றைய உலகமயமாதல் போக்கிற்கு வலுச் சேர்ப்பதாக அமைந்து - நின்று நிலைபெறத் தொடங்கிவிட்டது.

உலகில் எந்தவொரு பிரதேசத்திலும் முரண்பாடற்ற சூழலில் தான்- அப்பிரதேசத்தின் கொள்வனவுச் சக்தியை (Purchasing Power) அதிகரிக்கலாம்.

இன்றைய உலகமயமாதல் போக்கிற்கு - மக்களிடையே ஒரு தரமான வாழ்க்கைத் தரத்தினை உறுதிப்படுததும் வகையில், அவர்கள் - கொள்வனவுச் சக்தியின் மூலம் தேசிய எல்லைகளைக் கடந்த கம்பனிகளது உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்யக்கூடிய தகுதிப்பாட்டை கொண்டிருக்க வேண்டும்.

அதன் மூலமே - தேசிய எல்லைகள் கடந்த கம்பனிகளானது, தொடர்ச்சியாக இலாபம் உழைப்பதற்கும் நின்று நிலை பெறுவதற்கும் ஏதுவாக அமையும்.

இந்த வகையில் - மேற்படி கம்பனிகளானது தங்கள் பொருளாதார பலத்தின் மூலம், தேசிய அரசுகளைக் கட்டுப்படுத்தக்கூடிய வல்லமையை கொண்டிருப்பதனால் - ஒரு குறித்த தேசிய எல்லைகளுக்குள் உள்ள முரண்பாடுச் சூழலைத் தமக்குச் சாதகமாக்கி தீர்த்து வைக்கின்றன.

இதில் - தேசிய எல்லைகள் கடந்த கம்பனிகளானது - தமது சந்தை துண்டங்களை ஒருங்கமைந்த நிர்வாக கட்டமைப்பிற்குள் கொண்டு வருகின்றன. அதேவேளை, சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களுக்கு இலகுவாக - தேசியப் பிரச்சினைகளை, அப்பிரச்சினைகளால் உருவாகும் முரண் நிலையை - வூட்றோ வில்சனது - முதலாளித்துவ சுயநிர்ணயம் மூலமே அவை தீர்த்துவைக்க முயல்கின்றன.

இந்த வகையில் - இன்றைய உலகில், மக்களது மளவிற்கு தேசிய கலாசாரங்களை விடுத்து 'ஐரோப்பிய மையவாதக் கலாசாரமாக' (Euro centric culture), உலகளாவிய கலாசாரமாக (Global culture) முதன்மை பெறுகின்றது.

**வேலும்மயிலும் சேந்தன்**

இதற்குக் காரணம் எந்தவொரு சமுகத்தினதும் "கொள்வனவுத் தெரிவுரிமையை" (Purchasing priority) அச்சமூகம் சார்ந்த கலாசாரமே தீர்மானிக்கும் என்பதாகும்.

அதேவேளை - பல்வேறு கலாசாரங்களுக்கும் மாறுபட்ட

தாகவும் ஒருங்கிணைந்ததாகவும் இருக்க வேண்டிய தேவையும் - தேசிய எல்லைகள் கடந்த கம்பனிகளுக்கு உண்டு.

இந்த வகையிலேயே - இன்று ஒரு பிராந்தியத்திலே உள்ள

பெயரில் வர்த்தக மற்றும் பொருளாதார உடன்படிக்கைகளையும், பிராந்தியக் கூட்டமைப்புகளையும் உருவாக்கி வருகின்றன.

அவ்வாறான - கூட்டமைப்புகளுக்கிடையே சுங்கத் தீர்வைகளை விலககுவதிலிருந்து, ஒரே நாணயத்தை பயன்படுத்துவது வரையில் ஒரு இறுக்கமான கூட்டமைவை உருவாகின்றன.

இதற்கு உதாரணமாக - நமது 'சார்க்' கூட்டமைப்பிலிருந்து - தற்போது சமஷ்டி கூட்டமைப்பாக வர எத்தனித்துக் கொண்டிருக்கும் 'ஐரோப்பிய யூனியன்' வரை எடுத்துக் கூறலாம்.

இந்த வகையில் - 2020ஆம் ஆண்டளவில், உலகம் பாரிய இரு சந்தைத் துண்டங்களாக வகைப்படலாம் என

ளும் பூமியின் வடக்கு - தெற்கு அரைக் கோளங்களாக அமையும் என ஆய்வாளர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

இவ்வாறு - இரு துண்டங்களாக சந்தை வகைப்படும்போது, இன்று ஐக்கிய நாடுகள் சபையிலுள்ள 192 தேசிய அரசுகளும் இரு அரைத் துண்டங்களுக்குள்ளும் உள்வாங்கப்படப் போகின்றன என்பது இங்குள்ள சுவாரசியமான விடயமாகும்.

மேற்படியாக உள்வாங்கப்படும்போது - தற்பொழுது சுயநிர்ணயத்தை வலியுறுத்தும் காரணிகளான தேசியம், மரபுவழித்தாயகம், மொழி, தேசியப் பொருளாதாரம் என்ற அடிப்

போகின்றன என்பது - இன்று மிகப்பெரும் அரசியற் பொருளியல் (Political economy) ஆய்வு விடயமாகும்.

மேற்படி விடயத்தை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாக - அமெரிக்க ஹவார்ட் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவப் பேராசிரியரான மைக்கல் போட்டர் (Micheal Potter) தனது - "நாடுகளின் ஒப்பீட்டு ரீதியான அனுகூலம்" என்ற நூலில் -

தற்போதுள்ள தேசிய பொருளாதாரங்களது நுண்பாக பொருளாதார அத்திவாரங்களை (Micro Economics Structure) எவ்வாறு இணைப்பது என்பது பற்றி, 1990 ஆம் ஆண்டு தெளிவான செயற்பாட்டுக்குரிய பிரயோக வரையறைகளை முன்வைத்தார்.



தேசிய எல்லைகளைக் கடந்த கம்பனிகளை ஒருங்கிணைக்கும் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் தலைமைச் செயலகம் - வொஷிங்டன்.

மைக்கல் போட்டரது தத்துவாத்தப் பின்னணியிலேயே- உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் - வறிய மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு "நிபந்தனை அடிப்படையில்" கடன்களை வழங் கும்போது- "கட்டமைப்புச் சீராக்கம்"- (Structural Adjustment) என்ற நிபந்தனையின் பேரில் கடன்களை வழங்கி வருகின்றன.

இந்த கட்டமைப்புச் சீராக்கம் - எந்தவொரு நாட்டினையும் சுய உற்பத்தியில் தனித்திருக்க இயலாதவாறு - தங்கு நிலைப் பொருளாதாரத்திற்கு இட்டுச்செல்லும் அபாயம் வாய்ந்ததாகும்.

இவ்வாறு - தங்கு நிலைக்கு தனது பொருளாதாரத்தை கொண்டு வந்த நாடு, தேசிய எல்லைகள் கடந்த கம் பனிகள் தனது நாட்டிற்குள் செயற்பட அனுமதித் தேயாக வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்படும்.

தமது வியாபாரச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் தேசிய எல்லைகள் கடந்த கம்பனிகளானது படிப் படியாக தமது கம்பனிகளது பொருளாதாரத்தை - குறித்த நாட்டின் பொருளாதாரத்தில் குறிப்பிட்ட சதவீதத்திற்கு பேணி வைத்திருக்கும்.

இவ்வாறு தேசிய பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்தும் நிலையை கீழ்வரும் அட்டவணை மூலம் பார்க்கலாம்.

| நாடுகள் | குடித் தொகை (மில்லியன்) (1998) | தலைக் குரிய வருமானம் (அடொ.) (1998) | மொ.உ.உ வருடாந்த சராசரி வளர்ச்சி% (1990-97) | மொ.உ.உ வின்% மாக TNC மூலதன மயமாக்கல் (மொ.உ.உ 1997) | தயாரிப்புத் தொழிலில் சேர்க்கப் பட்ட பெறுமதி மொ.உ.உ வின் % ஆக (1997) | கைத்தொழிலில் TNC யின் வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|---|---|---|
| இலங்கை | 19 | 810 | 5.3 | 13.9% | 17 | 8.8 |
| சீனா | 1,239 | 750 | 11.6 | 22.9% | 37 | 9.5 |
| ஹொங்கொங் | 07 | 23,670 | 5.3 | 241.1% | 07 | - |
| இந்தியா | 980 | 430 | 6.0 | 33.7% | 19 | 8.0 |
| இந்தோனேசியா | 204 | 680 | 7.5 | 13.5% | 26 | 10.8 |
| ஜப்பான் | 126 | 32,380 | 1.5 | 52.9% | 24 | 0.5 |
| மலேஷியா | 22 | 3,600 | 8.6 | 95.1% | 34 | 0.5 |
| பாகிஸ்தான் | 132 | 480 | 4.2 | 17.8% | 17 | 5.1 |
| சிங்கப்பூர் | 03 | 30,060 | 8.5 | 110.4% | 24 | 7.5 |
| தென்கொரியா | 46 | 7,970 | 7.2 | - | 26 | 7.9 |
| தாய்லாந்து | 61 | 2,200 | 7.4 | 15.3% | 29 | 9.3 |

*TNC - Trans National Company) - தேசிய எல்லைகள் கடந்த கம்பனி.*

இதன் வழியே உருவாக்கப்படும் உலகப் பொருளாதாரத்தை - தேசிய எல்லைகள் கடந்த கம்பனிகளானது, தமது தொடர்ச்சியான உற்பத்தியை உறுதிப்படுத்தும் வகையிலும் தங்களது மூலதனத்திலும் வியாபார நடவடிக்கைகளிலும் - அக்கம்பனிகளது வியாபாரக் குறியை (**Trade Mark**) தமது மொத்த மூலதனத்தின் பெரும் பாகமாகக் காட்டுவதனை நாம் பின்வரும் அட்டவணையில் பார்க்கலாம்.

| சின்னம் | பெறுமதி (100 கோடி அ.டொ) | தேசிய எல்லைகளைக் கடந்த கம்பெனியின் பெறுமதியில் வியாபாரச் சின்னத்தின் பங்கு |
|---|---|---|
| கொக்கோகோலா | 83.9 | 59% |
| மைக்ரோ சொப்ட் | 56.7 | 21% |
| I.B.M. | 43.8 | 28% |
| ஜெனரல் எலக்ட்ரிக் | 33.5 | 10% |
| போர்ட் | 33.2 | 58% |
| டிஸ்னி | 32.3 | 61% |
| இன்டெல் | 30.0 | 21% |
| மக்டொனால்ட்ஸ் | 26.2 | 6.4% |
| A T & T | 24.2 | 24% |
| மெல்பரோ | 21.1 | 19% |
| நொக்கியா | 20.7 | 44% |
| மேர்சிடீஸ் | 17.8 | 37% |
| நெஸ்கெபே | 17.6 | 23% |
| ஹெவ்லெட் - பெக்கார்ட் | 17.1 | 31% |
| ஜில்லெட் | 15.8 | 37% |

*ஆதாரம்: சிட்டி பாங்க் ஆய்வு (1999)*

இவ்வாறு ஒரு உற்பத்தியின் தரத்தைப் பார்க்கிலும் வியாபாரக்குறி / வியாபாரச் சின்னம் மூலமாக அதன் உற்பத்திச் செலவை போலியான வகையிலே ஊதிப் பெருக்க எடுக்கும் நடவடிக்கையினையே "பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள்" (Value added products) என அழைக்கலாம்.

உதாரணமாக - Coca Cola, Mac Donals, Nike, IBM ஆகியனவற்றைக் குறிப்பிடலாம்.

அதாவது - நாம் கடைக்குச் சென்று சாதாரணமாக 'சோடா' என்று கேட்காமல், 'Coca Cola' தாருங்கள் என்று கேட்க வைக்கும் தந்திரோபாயம் இதுவாகும். இது ஒரு போலியான நாகரிகப் பண்பாட்டையும் வளர்த்து வருவதைக் காணலாம்.

இவ்வாறு 'பெறுமதி சேர்க்கப்பட்ட' உற்பத்திப் பொருட்களுக்கு - தேவைக்கு மீறிய வகையில் விளம்பரங்களைச் செய்து, அதன் மூலம் அதனை மனித மனத்தில் வலிந்து பதிய வைத்து - குறித்த பண்டத்தையே வாங்குமாறு ஒரு

## சுயநிர்ணயம் ~ ஒரு பார்வை — பகுதி -06

மனோநிலையை தோற்றுவிப்பதே இவ்வியாபாரச் சின்னத்தின் குறிக்கோளாகும்.

இவ்வாறு தேசிய எல்லைகளுக்கு அப்பால் - இலத்திரனியல், அச்சு ஊடகங்கள் மூலமாக - நுகர்வுக் கலாச்சாரத்தினை (Consumic Culture) உருவாக்குவதன் மூலம், உலகில் பெரும் சந்தைத் துண்டங்களை தேசிய எல்லைகள் கடந்த கம்பனிகள் உருவாக்குகின்றன.

இவ்வாறு - உருவாக்கப்படும் சந்தைத் துண்டங்களில் (தேசங்கள் என்பதற்குப் பதிலாக சந்தைத் துணடங்கள் என இங்கு குறிக்கப்படும் பதத்தினை கூர்ந்து நோக்க வேண்டும்) யுத்தங்கள், சண்டைகள் இல்லாத செழிப்பான பொருளாதாரத்தை உருவாக்க இன்று உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி முறைமையை தேசிய எல்லைகள் கடந்த கம்பனிகளது சிந்தனையாளர்கள் - அரசியற் கோட்பாட்டு ரீதியாக முன்வைப்பதனை நாம் அவதானிக்கலாம்.

இன்று அரசியல் முரண்பாடு உள்ள அனைத்திடங்களிலும் சமஷ்டி முறை மூலம் பிரச்சினை தீர்க்க வழியமைத்துக் கொடுக்க - தேசிய எல்லைகள் கடந்த கம்பனிகள், அக்கம்பனிகள் தாங்கி நிற்கும் அமெரிக்கா போன்ற வல்லரசுகள், சர்வதேச நாணய நிதியம் - உலக வங்கி போன்ற சர்வதேச நிதி நிறுவனங்கள், ஐக்கிய நாடுகள் சபை போன்றன - மிக ஆர்வமாக இருப்பதற்கு இந்தச் சுயநலமும் ஒரு முக்கிய காரணம் என்றால் அது மிகையல்ல என்றே கூறலாம்.

இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு - உலகியலை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். இதுவே - சரியான புரிதலுமாக அமையும்.



*நுகர்வுக் கலாசாரத்தை நோக்கி நகரும் நாளைய சமூகத்தினர்.*


இது நிற்க - அடுத்தடுத்த வாரங்களில் உலகிலுள்ள சமஷ்டி (Federalism) மற்றும் உள்ளக சுயநிர்ணய உரிமை (Internal Self Determination) ஆகியன பற்றி விரிவாகப் பார்ப்போம்.


(பிரதி செவ்வாய் தொடரும்)

# பதுங்கு குழிகளை

யூகோஸ்லாவியாவுக்கு எதிரான போரில் அமெரிக்கா உபயோகித்த பதுங்கு குழிகளை அழிக்கும் குண்டுகள் (Bunker Busters ) எதிர்பார்த்த பலனைத்தராமையினால் இவ்வகை குண்டுகளில் மாற்றங்களைச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வாறு மாற்றத்திற்குள்ளான குண்டுகள், ஆப்கான் போரில் 'அல்கொய்டா' வுக்கு எதிரான போரில் திருப்தியான பலனை தந்துள்ளதாக அமெரிக்கா கூறுகின்றது. BLV-118 எனும் இந்த ஊடுருவி அழிக்கும் குண்டு, ஆப்கான் போரில் சிறந்த பெறுபேறுகளை வழங்கியுள்ளது.

இந்தக் குண்டு ஒரு மலையின் மேற்பரப்பைத் தாக்கினால் அது பல அடி தூரம் பாறைகளைத் துளைத்துச் சென்று, அதன் பின்பே வெடிமருந்து வெடிக்கவைக்கப்படும். இதனால், ஏற்படும் அதிர்வு மலையினுள் இருக்கக் கூடியவர்கள் மற்றும் கட்டடத்தொகுதிகளை நொருக்கக் கூடியது.








# சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த சார்லி சாப்ளின்

**அரங்கம் 05**



ஆனால் சார்லி, சிறு வயதில் செய்தது போலவே ஒவ்வொரு அருமையான நிகழ்ச்சிக்குப் பின்னணியில் இருக்கும், களைப்பையும், நெருக்கடியையும், காயங்களையும் கண்டான். அவன் மது மற்றும் முகச்சாயங்கள், புழுதி மற்றும் வியர்வை, புலி மற்றும் கடல் சிங்கம் வாயு இவைகளின் மணங்கள் அடங்கிய உலகின் ஓர் பகுதியாகத்தான் இருந்தான்.

நடிப்புலகத்தில் சார்லி எடுத்துவைத்த முதலடி வெற்றிகரமாகத்தான் இருந்தது. ஆனால் இரு வருடங்களுக்குப் பிறகு அச்சிறுவாகளுடனான அவனுடைய நாட்கள் முடிவுக்கு வந்தன.

ஹன்னா களைப்பின் காரணமாக சிவந்த கண்களுடன் தையல் இயந்திரத்தின் முன் குனிந்து, இரக்கமில்லாத ஊசிக்கு அடியில் தன்னுடைய விரல்களால் துணியைச் செலுத்துவதை இரவு நேரங்களில் சார்லி அமர்ந்து கவனித்தான். மேடையில் களித்த அதிசய நாட்கள் எல்லாம் முடிந்து விட்டது போல் தோன்றியது சாப்ளினுக்கு.

இப்போது இன்னொரு அடி விழுந்தது. குடிப்பழக்கத்தினால் அழிந்து போன தந்தை சார்லஸ் சாப்ளின் , தனது முப்பத்தேழாவது வயதில் இறந்து போனார்.

அந்தச் சமயத்தில் சிட்னி கப்பலில் சென்றிருந்தான். சகோதரன் வெளியே இருக்கும் போது, குடும்பத்துக்கு உதவத்தானும் பணம் சம்பாதிக்க வேண்டுமென்று சார்லிக்குத் தோன்றியது.

அவன் சந்தையிலிருந்து நார்ஸிஸி மலர்க் கொத்துக்கள் வாங்கி, அதை ஒரு பென்னிக் கட்டுகளாகச் செய்து பொது விடுதிகளுக்கு அருகே கூவி விற்பனை செய்தான். துக்கம் அனுஷ்டிக்க அவன் கையில் கட்டியிருந்த நாடாவும், அவனுடைய சோகமான கருப்புக் கண்களும் பல பெண்களின் இதயத்தைக் கசிய வைத்து அவனுக்கு கூடுதலாகச் சில நாணயங்களைப் பெற்றுத்தந்தது. ஆனால் அவனுடைய தாய் இதை அறிந்தவுடன் உடனே அவனைத் தடுத்துவிட்டாள்.

"குடிப்பழக்கம் உனது அப்பாவைக் கொன்றது. மதுக்கடையிலிருந்து கிடைக்கும் வருமானம் நமக்கு துரதிருஷ்டத்தையே கொண்டு வரும்" என்று கூறினாள்.

ஆனால் அவன் கொண்டு வந்த பணத்தை தன் வசம் வைத்துக் கொண்டாள்.

அது 1901. பதினொரு வயது சார்லி வேலை தேடிக் கொள்வதில் தீர்மானமாக இருந்தான். அவன் எல்லா வேலைகளையும் செய்தான். ஏவற்பையன், மருத்துவருக்கு உதவியாளன், கையாள், கண்ணாடிச்சாதனங்கள் தயாரிக்க பயன்படும் குழாய்களை ஊதுபவனாகவும் கூட இருந்தான். இந்தக் கடைசி வேலையில் அதிகமான வெப்பத்தினால் ஒரு நாள் கூடத் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

சிட்னி கடலில் இருந்து தனது ஊதியத்துடனும் அன்பளிப்பாகக் கிடைத்த சிறிய பணத்துடனும் திரும்பினான். அப்பணம் அந்த வேனில் காலத்திற்கு போதுமானதாக இருந்தது. சார்லி பிற்காலத்தில் கூறினாராம் "அது எங்களுடைய கேக் மற்றும் ஐஸ்கிறீம் காலம்" நெருப்பில் வாட்டப்பட்ட டீ கேக்குகள், மீன்கள், ஒருவகை அப்பம் என்று அந்த நாட்கள் அவர்களுக்கு சுவையான கனவாக கழிந்தது. விரைவிலேயே சிட்னி மீண்டும் கடல் வேலைக்கு திரும்பிச் செல்ல வேண்டி இருந்தது. மீண்டும் அவர்களை வறுமை சூழ்ந்தது.

சார்லி தங்களுடைய பழைய துணிகளை உள்ளூர் சந்தையில் விற்க முயன்றான். ஆனால் அவை ஏழைகள் கூட வாங்கத் தயங்கும் சீர்கேடான நிலையில் இருந்தன. சிறு மரப்படகுகளைச் செய்யத் தொடங்கினான். ஆனால் அதன் பசை ஹன்னாவின் தையல் வேலையைப் பாதித்ததால் பொம்மைகள் செய்வது ஒரு முடிவுக்கு வந்தது.

ஹன்னா மாறிக் கொண்டிருந்தாள். முன்பு எவ்வளவு பணம் பற்றாக் குறையிருந்தாலும் அவர்களின் தங்குமிடம் எப்போதும் சுத்தமாகவும், பிரகாசமாகவும் இருக்கும். ஆனால் இப்போது அவை புழுதி படிந்திருப்பதோடு அசுத்தமாகவும் மாறிக்கொண்டிருந்தது. விபரம் புரியாமல், சார்லி சில நேரங்களில் அவளைக் குறை கூறினான். ஆனால் அவளுடைய மாற்றத்திற்கு அக்கறையின்மை மட்டுமே காரணமில்லை.

தங்களுடைய ஒளியற்ற குறுகிய அறையையே கண்டு அலுத்துப்போன சார்லி கோடைகாலத்தின் ஒரு காலைப் பொழுதில் நண்பர்களைப் பார்க்கப் போனான். மதியம் அவன் மெதுவாக நடந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் சிலகுழந்தைகள் அவனைத் தடுத்தார்கள். 'உன் அம்மாவிற்கு மூளை பிசகி விட்டது. கை நிறைய கரியை வைத்துக் கொண்டு அவை தன் குழந்தைகளுக்குப் பிறந்த நாள் பரிசுகள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறாள்.

சார்லி அக்குறுகலான படிக் கட்டுகளில் தாவி ஏறினான். அவனுடைய தாய் ஜன்னலருகே தனது பழைய இடத்தில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான். அவள் அவனைக் குழப்பமாகப் பார்த்தாள்.

'நான் சிட்னியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அவர்கள் அவனை என்னிடமிருந்து பிரித்து வைத்திருக்கிறார்கள்'. .சார்லி, தனது தாயை உடல் நலமில்லாது பார்த்திருக்கிறான். ஆனால் இப்படியல்ல. பதினான்கு வயது சார்லி அவளை ஏழைகளின் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றான். மருத்துவமனையின் பெரிய இரும்புக் கதவு வரையிலான ஒரு மைல் தொலைவையும் தடுமாறும் தாயை அணைத்தபடி கால் நடையாகவே அழைத்துச் சென்றான். தெருவில் சென்றவர்களெல்லாம் அவள் மது அருந்தியிருப்பதாகவே எண்ணி அவர்களை அருவருப்புடன் பார்த்தார்கள்.

உயரமான நிறமற்ற அந்த அறையில் மருத்துவர் ஒருவர் ஹன்னாவைச் சாந்தப்படுத்தி பரிசோதித்தார். அவள் உண்மையிலேயே உடல் நலம் பாதிக்கப்பட்டிருப்தாக அவர் சார்லியிடம் கூறினார். ஹன்னா அந்த மருத்துவமனையிலேயே ஆறு நாட்கள் அனுமதிக்கப்பட்டிருந்து பிறகு மனநல காப்பகத்திற்கு மாற்றப்பட்டாள்.

(அடுத்த அரங்கில் தொடரும்)

## மஞ்சுச் சிதறல்

பல்சுவை அரங்கு

# ஆழமான அன்புத் தொடர்பே விவாகம்

குடும்பம் என்று கூறும் பொழுது ஸ்திரமான, ஆழமான தொடர்புகளின் கூட்டே. எம்மிடையே நான்கு விதமான தொடர்புகள் இருப்பதைக் காணலாம்.

அ) சிலருடன் நாம் தொடர்பு கொள்ளும் போது "எப்படி?" "நல்லம்" என்ற அளவில் நிறுத்தி விடுகிறோம். சாதாரணமாக பஸ்சில் அடிக்கடி பயணம் செய்யும் பொழுது அறிமுகமான ஒருவரைக் கண்டால் ஏற்படுத்தும் தொடர்பு இப்படிப்பட்டது.

ஆ) அடுத்த நிலை இதை விட ஆழமான தொடர்பாகும். அதாவது "எப்படிச் சுகம்?, நல்ல சுகம்!" என்பதோடு மட்டும் நிறுத்தி விடாது சிலருடன் நெருக்கமான தொடர்பை வைத்துக் கொள்கிறோம். இவர்களை நண்பர்கள் என்கின்றோம்.

இ) இன்னும் சிலருடன் எமது வேதனை, சந்தோஷம், பயம என்பவற்றையும் பகிர்ந்து கொள்கிறோம். அடிக்கடி தொடர்பு கொள்ளுகின்றோம். அவர்களை மிகவும் நெருங்கிய நண்பர்கள் என்கின்றோம். இந்த நிலைக்குச் சென்றதும் அப்படித் தொடர்புள்ளவர்களின் தொகைகளும் படிப்படியாக குறைந்து செல்வதைக் காண்கிறோம்.

ஈ) இதைவிட ஆழமான உறவு கணவன்- மனைவி உறவாகும். கேந்திரமான உறவாகும். சரீரம், மனம், ஆன்மீக வேதனைகளைப் பகிர்ந்து கொண்டு ஏற்படுத்தும் ஆழமான உறவாகும்.

இன்று குடும்பங்களை எடுத்துக் கொண்டால் இப்படிப்பட்ட ஆழமான, கேந்திரமான உறவு இல்லாதிருக்கலாம். ஆனால் உற்சாகமெடுத்தால் இப்படிப்பட்ட ஆழமான உறவை வளர்த்துக் கொள்ளலாம். எம்மிடையே ஆழமான அன்புறவை வளர்த்துக் கொள்ள இரண்டு முக்கியமான காரணங்களை மனதில் கொள்ளுதல் வேண்டும்.

நல்ல உறவை ஏற்படுத்துவதற்கான அறிவு முதலில் தேவை. அறிந்தாலும் அக் குறிக்கோளை நிறைவேற்ற நான் ஒத்துழைக்கவில்லையேல்...

ஆழமான உறவை என்னால் ஏற்படுத்த முடியாது போய்விடும். ஆகவே, கணவன்- மனைவி இருவருக்கும் பரித்தியாகமும், உற்சாகமும் தேவை. உதாரணமாக ஒரு மேசையை அறைக்குள்ளிருந்து வெளியே கொண்டு வர இந்த விதத்தில் சரித்து, தூக்கி எடுத்தால் வெளியே கொண்டு வரலாம் என்ற அறிவு இருவருக்கும் இருந்தால் மட்டும் போதாது. இருவரும் சேர்ந்து அந்த மேசையைச் சரித்துத் தூக்க வேண்டும். அப்பொழுதே மேசையை வெளியே எடுக்க முடியும். அதாவது அறிவு மட்டுமிருந்தால் போதாது. பயிற்சியும், உற்சாகமும் தேவை.

**மனித உறவு**



ஒவ்வொரு மனிதனுக்கும் உறவு (தொடர்பு) தேவையான ஒன்றாகும். குடும்ப வாழ்விலும் கணவன் மனைவிக்கிடையில் நல்ல உறவு தேவைப்படுகிறது திருமணம் முடிந்ததும் தமது குடும்பத்தில் மகிழ்ச்சியுடன் வாழவே எல்லோரும் விரும்புவர். இருப்பினும் தமது குடும்ப வாழ்வை நன்றாக ஆக்கிக் கொள்வதற்கு எது தேவை என்பதை அறிந்து கொண்டவர்கள் மிகச்சிலரே. பெரும்பான்மையான தம்பதிகள் தமது குடும்பத்தில் முக்கியமானதாகக் கருதுவது எது என்பதை அறிந்து கொள்ள ஒரு வழி உண்டு. அதாவது அவர்கள் எதற்காக அதிகம் கஷ்டப்படுகிறார்கள் என்பதைத் தேடிப் பார்த்தால் அது புலனாகும்.

பெரும்பான்மையான தம்பதிகள் தமது குடும்பத்துக்காகப் பணம் சம்பாதிப்பதிலேயே அதிகம் கஷ்டப்படுகிறார்கள். சுக போகமான வீட்டைக் கட்டவும், பொருட்களைச் சேகரிக்கவுமே அதிகம் கஷ்டப்படுகிறார்கள். இவைகள் குடும்ப வாழ்வுக்கு அவசியமற்றவை ,என்று கூறவில்லை. விவாக வாழ்விலும், குடும்ப வாழ்விலும் ஆழமான அன்புத் தொடர்பை வளர்ப்பது ஏனையவற்றை விட முக்கியமானது என்பதையே இங்கு கூற விளைகிறேன்.

ஒவ்வொரு மனிதனுக்கும் உறவு, தொடர்பு அவசியமானது என்று கூறினேனல்லவா? இதை ஓர் அனுபவத்தில் நோக்குவோம். குடும்பத்தில் கணவன் ஒரு வருட மேற்படிப்புக்காக வெளிநாடு செல்கிறார். விமான நிலையத்தில் வழியனுப்ப மனைவி, பிள்ளைகள் செல்கின்றனர். ஒரு வருடம் முடிந்ததும் கணவன் திரும்பி வருவார் என்று தெரிந்தாலும், விமானம் பறக்கும் போது மனைவி, பிள்ளைகள் அழுகின்றார்கள். இங்கே உறவு தற்காலிகமாக விலகும்போதும், அவர்களால் அதைத் தாங்க முடியவில்லை.

ஒரு நாள் இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையான ஒருவர் என்னிடம் ஆலோசனை பெற வந்தார்."நான் இரண்டு முறை தற்கொலை செய்ய முயன்றும் முடியவில்லை. இன்று உங்களைச் சந்தித்து உங்களிடமிருந்து எனக்கு விடை கிடைக்கவில்லையேல் இறப்பதே மேல் என்ற எண்ணத்துடன் வந்தேன்" என்றார். அவரோடு அன்பாகப் பேசி அவரது பிரச்சினைகளுக்குச் செவிமடுத்தேன். அவரிடம் ஏராளமான சொத்துக்கள் இருந்தன. வசதியான வீடு, வாகனம், பணம் எல்லாம் இருந்தன. ஆனால் "சில காலமாக எனது மனைவியும் பிள்ளைகளும் என்னுடன் கதைப்பதில்லை" என்றார்.

(அடுத்த வாரம் தொடரும்)

எஸ்.ஜே.யோகராசா

## நோபல் பரிசு ஓர் அறிமுகம்


அல்பிரட் நோபல்

சுவீடன் நாட்டைச் சேர்ந்த அல்பிரட் நோபல் (Albert Nobel) எனும் ஆய்வாளர் 1890இல் நைட்ரோ கிளிசரின் (Nitro Clese rene) எனும் புதிய வகை வெடிமருந்தைக் கண்டறிந்தார்.

இவ்வெடி மருந்து மூலம் அல்பிரட் நோபல் பெருமளவு சொத்துக்களைப் பெற்றுக் கொண்டார். இவருக்கு வாரிசு எவரும் இல்லாத காரணத்தால் இச் சொத்து வருமானத்தை நிலையான வைப்பிலிட்டு அதன் மூலம் பெறப்படும் வட்டி வருமானத்திலிருந்து வருடாந்தம் உலகளாவிய ரீதியில் பௌதீகம், இரசாயனம், மருத்துவம், இலக்கியம், உலக சமாதானம் போன்ற துறைகளில் சிறந்து விளங்குவோர்க்கு பரிசு வழங்கி, கௌரவிக்குமாறு உயில் எழுதி வைத்துவிட்டு 1896-12-10 அன்று இறந்தார்.

இவரது மறைவையடுத்து 1901ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 10ஆம் திகதி நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

1901ஆம் ஆண்டிலிருந்து ரோயல் சுவீடிஷ் அக்கடமி எனும் நிறுவனம் மேற்குறித்த துறைகளில் சிறந்து விளங்குவோருக்கு பரிசு வழங்கி வருகின்றது.

1969ஆம் ஆண்டிலிருந்து சுவீடன் நாட்டு ஷரிக்ஸ் வங்கியின் அன்பளிப்புத் தொகையைக் கொண்டு பொருளாதாரத் துறையில் சிறந்து விளங்குவோருக்கும் நோபல் பரிசு வழங்கப்படுகின்றது.


## நோபல் பரிசு சில தகவல்கள்

- இலக்கியத்திற்கான நோபல் பரிசு 1914, 1918, 1935, 1940, 1941, 1942, 1943 ஆகிய 07 ஆண்டுகளில் வழங்கப்படவில்லை.
- நோபல் பரிசைப் பெற்ற முதற் தமிழர் சேர். C.V. இராமன்.
- நோபல் பரிசை ஆசியாவில் முதன் முதலாகப் பெற்றவர், கவிஞர் இரவீந்திரநாத் தாகூர்.
- மிகக்குறைந்த வயதில் நோபல் பரிசைப் பெற்றவர், லோரன்ஸ் பிராக்.
- உலக அமைதிக்கான நோபல் பரிசை அதிக தடவைகள் பெற்ற நாடு, ஐக்கிய அமெரிக்கா.
- நோபல் பரிசைப் பெற்ற முதல் பெண், மேரி கியூரி அம்மையார்.
- நோபல் பரிசைப் பெற மறுத்தவர், ஜீன்பால் சார்ட்ரே.
- இருதடவைகள் நோபல் பரிசை பெற்றவர், லின்ஸ் பௌலிஸ்: 1954 - இரசாயனவியல், 1962 -உலக சமாதானம்.
- நோபல் பரிசுகளில் உலக சமாதானத்திற்கான விருதே கூடிய மதிப்பு வாய்ந்ததாகும்.
- இவ்வருடம் வழங்கப்படும் நோபல் பரிசின் மொத்தத் தொகை ரூ.10 லட்சம் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

# 2002 நோபல் பரிசு வென்றவர்கள்



## மருத்துவத்துறை




சேர்.ஜோன் சல்ஸ்டன் | சிட்னி பிரேனர் | றொபேட் ஹுவெட்ஸ்


மரபணு ஒழுங்குமுறை மூலம் எய்ட்ஸ் மற்றும் புற்றுநோய்க்கு எதிரான ஆராய்ச்சிகளை மேற்கொண்டமைக்காக பிரித்தானியாவைச் சேர்ந்தவர்களான சேர்.ஜோன் சல்ஸ்டன், சிட்னி பிரேனர், மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த றொபேட் ஹுவெட்ஸ் ஆகியோருக்கு இம்முறை மருத்துவத்திற்கான நோபல்பரிசு வழங்கப்படுகின்றது.

## பொருளாதாரத்துறை



டானியல் காஹ்னேமன் | வேர்ணன் எல். சிமித்

அமெரிக்காவைச் சேர்ந்தவர்களான டானியல் காஹ்னேமன், வேர்ணன் எல். சிமித், ஆகியோர் பொருளாதாரத்துறைக்கான இவ் வருட நோபல் பரிசைப் பகிர்ந்து கொள்கின்றார்கள்.


## சமாதானம்



சர்வதேச பிரச்சனைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதற்கும், மனித உரிமை மற்றும் ஜனநாயகம் என்பவற்றை ஏற்படுத்துவதற்கும் பொருளாதார சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குமென பல வருடகாலம் பாடுபட்டமைக்காக முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டருக்கு 2002 ஆம் ஆண்டுக்கான நோபல் சமாதானப் பரிசு வழங்கப்படுகின்றது.

ஜிம்மி கார்ட்டர்


## இரசாயனவியற் துறை




ஜோன் பி. ஃபென் | கொய்சி டனாகா | கேர்ட் விற்ரிச்

இரசாயனவியல்-மூலக்கூறு தொடர்பான அதிபிரதான ஆராய்ச்சியை மேற்கொண்டமைக்காக அமெரிக்காவைச் சேர்ந்த ஜோன் பி ஃபென், ஜப்பானைச் சேர்ந்த கொய்சி டனாகா மற்றும் சுவிற்சர்லாந்து நாட்டவரான கேர்ட் விற்ரிச் ஆகியோர் இவ் வருடம் இரசாயனவியல் துறைக்கான நோபல் பரிசைப் பகிர்ந்து கொள்கின்றனர்


## இலக்கியத்துறை



வரலாற்று, அரசியல், மனித உரிமைகள் தொடர்பான ஆவணப் பதிப்புக்கு ஹங்கேரிய எழுத்தாளரான சேர்ந்த இம்ரே கேர்திஷ் இவ் வருடம் இலக்கியத்திற்கான நோபல் பரிசினைப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இம்ரே கேர்திஷ்

## பௌதீக இயற்பியல்




ரிக்கார்டோ கியாகோனி | ரேய்மன்ட் டேவிஸ் | மஸாதோஷி கொஷிபா

சூரிய ஒளி நட்சத்திரங்களில் இருந்து பிரபஞ்ச நன்மை கருதி, புதிய X-RAY கதிர்வீச்சைக் கண்டறிவதற்கு முயற்சிகளை மேற்கொண்டமைக்காக பௌதீக இயப்பியல் துறையில் இவ் வருடத்திற்கான நோபல் பரிசினை அமெரிக்கர்களான ரிக்கார்டோ கியா கேனி, ரேய்மன்ட் டேவிஸ் மற்றும் ஜப்பானியரான மஸாதோஷி கொஷிபா ஆகியோர் பகிர்ந்து கொள்கின்றனர்.

- நடப்பாண்டு உலக சமாதானத்திற்கு- கனடாவின் 19 வயது மாணவன் கிரெய்க் கீல் பெர்ஜரின், ஆப்கான் இடைக்காலத் தலைவர் ஹமீட் அல் கர்ஷாயீ, கியூபாவின் ஒஸ்வால்டோ பாயா, அமெரிக்காவின் ஜோஜ் W.புஷ், பிரித்தானியாவின் ரொனி பிளேயர் ஆகியோரது பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டிருந்தன.
- உலக சமாதானத்திற்கான விருது மட்டும் நோர்வேயிலும் (கூடிய மதிப்பு ஆகையால்), ஏனைய துறைகளுக்கான விருதுகள் சுவீடனிலும் அடுத்த மாதம் 10ஆம் திகதி வழங்கப்படும்.

தொகுப்பு :
பொன்னம்பலம் உமாசங்கர்

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

சிந்தனைக்கு

*'ஒல்வது அறிவது அறிந்து அதன் கண்தங்கி*
*செல்வாக்குச் செல்லாது இல்'*

*-திருக்குறள்*

# நமது நோக்கு

## இராஜதந்திர நகர்வின் வெற்றி !

தாய்லாந்தில் நடைபெற்ற இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் - கலந்துகொண்ட இருதரப்பினரிடையேயும திருப்தியான வெளிப்படுத்தல்களை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்பார்த்ததிலும், வேகமான, குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றிருப்பதாகவும், ஒருமித்த இணக்கப்பாடுகளை எட்டுவதில் இசைவான போக்கு வெளிப்படுத்தப்பட்டதாகவும் பேச்சுக்களில் பங்கேற்ற இரு தரப்பனருமே கூறுகின்றனர்.

தாய்லாந்தில் நடைபெற்ற பேச்சுக்களுக்கும், அங்கு காணப்பட்ட முன்னேற்றங்களுக்கும்- முக்கியத்துவம் அளித்த ஊடகங்கள், குறிப்பாக - மேற்குலக ஊடகங்கள் - தாய்லாந்துப் பேச்சுக்களை 'ஆசியாவின் மிக நீண்டகாலப் போர்களில் ஒன்றை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான மிகச் சிறந்த ஆரம்பம்' என்று பாராட்டியிருந்தன. அமெரிக்கா உட்பட பல நாடுகளும் இவ்வாறன கருத்தையே கொண்டுள்ளன.

இந்த வகையில் - சர்வதேச அளவில், பேச்சுக்களின் முன்னேற்றங்களுக்கு கிடைத்துள்ள ஆதரவு - இனப்பிரச்சினையை சர்வதேச மயப்படுத்த உதவியிருப்பதோடு, விடுதலைப் புலிகளை சர்வதேச அளவில், ஈழத்தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்று அங்கீகரிக்கவும் வழிசமைத்துள்ளது.

தாய்லாந்துப் பேச்சுக்களினூடாக விடுதலைப் புலிகளுக்கு கிடைத்துள்ள மிகப்பெரும் இராஜதந்திர வெற்றியாக இது அமைந்திருக்கின்றது.

இதேவேளை - எதிர்வரவுள்ள ஒஸ்லோ கூட்டத்தில், விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்கவுமுள்ளார்.

இச்சந்திப்பானது - விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான அண்மைக்காலத்தில் நடக்கும் மிக உயர்மட்டச் சந்திப்பாக அமையவுள்ளதுடன், இச்சந்திப்பின் மூலம் - சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இதுவரை அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட பிரசாரங்களையும் முரண்போக்கையும், அரசாங்கம் மூலமே அகற்றவும் விடுதலைப்புலிகள் முயற்சிக்கவுள்ளனர்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் - வெளிநாடுகளில் அழுத்தம் கொடுத்து மிகப் பிரயத்தனப்பட்டு உருவாக்கிய விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராஜதந்திர நெருக்கடியை, விடுதலைப் புலிகளின் இந்த சர்வதேச நோக்குடனான இராஜதந்திர நகர்வுகள் மிக இலகுவாக வெற்றி கொண்டிருக்கின்றன.

அதேவேளை, வட.-கிழக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியேற்றம், அபிவிருத்தி சார்ந்த நிதி திரட்டலுக்கும் உதவும் முகமாக - விடுதலைப்புலிகள் நேரடியாகவே சர்வதேச அளவில், அரசாங்கத்துடன் இணைந்து, சமாந்தரமான அதிகாரப் பலத்துடன் பேச்சுக்கள் நடத்த விருப்பதும், உதவிகளைக் கோரவிருப்பதும் - விடுதலைப் புலிகளின் அரசியல் பலத்தை வெளிப்படுத்தப் போதுமானதாகும்.

ஒரு புறம் யுத்தத்தின் பாதிப்புக்களைக் களைந்து, தமிழ் மக்களுக்கான பொருளாதாரச் சுபீட்சத்தை நோக்கி உறுதியாக நகரும் விடுதலைப் புலிகள், மறுபுறம் - சர்வதேச அளவில், மிகச் சாதுரியமாக இராஜதந்திரரீதியில் வெற்றிகளைக் குவித்து வருவது, ஈழத்தமிழர் வரலாற்றில் குறிப்பிடப்பட வேண்டிய அத்தியாயமாகும்.

இதேவேளை, இந்திய உபகண்டப் பிராந்திய அரசியல் அழுத்தங்களுக்கு அப்பால், ஈழத்தமிழர் பிரச்சினையானது சர்வதேசமயப்படுத்தப்படுவது - அடம்பிடிக்கும் பிராந்திய வல்லரசு ஒன்றின் செல்வாக்கினையும் கடந்து செல்லும் அதிநுட்பமான அரசியல் நகர்வை உருவாக்கியுள்ளது.

இந்த வகையில் ஈழத்தமிழர் விவகாரம் சர்வதேச அரங்கினுள் சென்றிருப்பதானது - ஒட்டுமொத்த நோக்கில்,

- ஈழத்தமிழர் பிரச்சினைகளைச் சர்வதேசம் ஏற்றுக் கொண்டுள்ளதையும்,
- விடுதலைப் புலிகளே ஈழத்தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என அங்கீகரித்திருப்பதையும்,
- நியாயமான தீர்வுக்கான, உறுதியான உலக அபிப்பிராயத்தைத் திரட்டிக் கொள்வதையும்,
- கடந்தகால ஏமாற்றங்களில் இருந்து விலகி, நம்பிக்கையுடனான நகர்வுகளுக்கு வழி சமைத்திருப்பதையும்,
- பௌத்த சிங்களப் பேரினவாதத்தின், பௌத்த சிங்கள உயர்குழாத்தின் அரசியல் சுயலாபங்களுக்கு அப்பால் ஈழத்தமிழர் பிரச்சினை ஆராயப்பட வேண்டியதன் அவசியத்தையும்,
- பிராந்திய நலன் நோக்கிய செல்வாக்குகள் கடந்த நிலையில் - ஈழத்தமிழருக்கேயான பிரச்சினைகள் ஆராயப்படுவதையும் வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

# பிரபாகரன் மீதான தீர்ப்புக்கு எதிராக கூட்டமைப்பு மேன் முறையீடு செய்யும்

## ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 200 வருடச் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளமைக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்வது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆராய்ந்து வருகிறது.

மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியாகி 15 நாட்களுக்குள் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் தீர்ப்புக்கு எதிரான மனுக்களைத் தாக்கல் செய்ய வேண்டும். இத்தீர்ப்பை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்வது குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு நாளை ஆராயும் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மத்திய வங்கிக் குண்டு வெடிப்பில் 5ஆவது எதிரியாக குற்றம் சாட்டப்பட்ட க.சிவகுமாருக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு எதிராக அவரது சட்டத்தரணி மேன் முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளார்.

# வடமராட்சி கிழக்கில் தற்காலிக வகுப்பறைகள்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதி பர் பிரிவிலுள்ள மூன்று பாடசாலைகளுக்கு - தலா 1 லட்சத்து பதினையாயிரம் ரூபா செலவில் தற்காலிக வகுப்பறைகளை அமைப்பதற்கு யூ.என்.எச்.சி.ஆர் நிறுவனம் நிதியுதவி வழங்கியுள்ளது.

இதன்படி கட்டைக்காடு ஆர்.சி. எம்.பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா, ஆழியவளை சி.சி.த பாடசாலை ஆகியவற்றிலேயே தற்காலிக வகுப்பறைகள் அமைக்கப்படவுள்ளன. (17)

# பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டாலே வரவு-செலவுத் திட்டத்தை கூட்டமைப்பு ஆதரிக்கும்

## நாடாளுமன்ற உறுப்பினர் தகவல்

(கொழும்பு நிருபர்)

நாடாளுமன்றத்தில் நாளை சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்குவதா இல்லையா என்பதை நாளை மறுதினமே தீர்மானிக்க முடியுமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழ் மக்களைப் பாதிக்காத எந்தவொரு விடயத்திற்கும், அரசாங்கத்தை ஆதரிக்கலாம். வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்பதைப் பொறுத்தே இதற்கு ஆதரவளிப்பதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க முடியும் என அந்நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

இப்போது யுத்தம் நடக்கவில்லை. எனவே யுத்த தளபாடங்களுக்காக நிதியை அரசாங்கம் ஒதுக்கீடு செய்தால் அதற்கு எதிராகத் தாம் வாக்களிக்க நேரிடும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை அரசின் 2003ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்துக்கு ஈ.பி.டி.பி., புளொட் ஆகிய கட்சிகளும் ஆதரவு வழங்கும் எனத் தெரியவருகின்றது.

# மூன்றாம் நிலைக் கல்வியின் தரத்தை உயர்த்த உலகவங்கி உதவத் தயார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உயர்கல்வியின் தரத்தை உயர்ந்த நிலையில் பேணுவதற்கு உலக வங்கி உதவி வழங்க முன்வந்துள்ளது.

இதன் முதற்கட்டமாக - உலக வங்கிப் பிரதிநிதிகள் குழுவொன்று கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தது. யாழ்ப்பாணத்தில் உயர்கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காகவும், உயர்நிலையில் அதனைத் தொடர்ந்து பேணுவதற்கும் வசதியாக செயற்படுத்தப்பட வேண்டிய செயற்திட்டங்கள் குறித்து மேற்படி குழுவினர் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

இதற்காக யாழ்ப்பாணத்தில் பலதரப்பட்ட கல்விசார் தரப்புக்களையும் இக்குழுவினர் சந்தித்துள்ளனர். யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் உட்பட அனைத்துப் பீடாதிபதிகள் மற்றும் மாணவர்கள் ஆகியோரையும், இப்பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு வெளியேறிய யாழ். வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகளையும் மேற்படி உலக வங்கி குழுவினர் சந்தித்து தகவல்களைச் சேகரித்துள்ளனர்.

இவ்வாறு பலதரப்பினரிடமிருந்தும் பெறப்படும் தகவல்கள் மற்றும் ஆலோசனைகளை அடிப்படையாக வைத்து மேற்படி நடவடிக்கைக்கான புதிய செயற்றிட்டம் ஒன்று உலக வங்கியால் தயாரிக்கப்படவுள்ளது. இச்செயற்றிட்டத்தில் ஆங்கிலக் கல்விக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் ஆங்கில மொழி மூலமான உயர்கல்விக்கும் வழிவகை செய்யப்படவுள்ளது.(க)

# படகுத் துறைக் குழு நெடுந்தீவில் அமைப்பு

(புங்குடுதீவு)

நெடுந்தீவு மேற்கு மற்றும் நெடுந்தீவு மத்தி பிரதேச மீன்பிடித் தொழிலாளர்களை உள்ளடக்கியதாக "காளா முனை படகுத் துறைக் குழு" ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் பரிசோதகர் வி.கனிஸடன் தலைமையில் கடந்த 31ஆம் திகதி நடைபெற்ற இக்கூட்டத்தில்- அமைச்சினால் அனுப்பப்பட்ட விபரத்தைக் கொண்டு, ஒவ்வொரு துறைமுகப் பிரதேசங்களிலும்- இவ்வாறான குழுக்கள் அமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் எனவும்,

கடற்றொழில் அமைச்சு, திணைக்களங்களால் வழங்கப்படும் மானிய உதவித் திட்டங்கள் அனைத்தும் இக்குழுவினூடாகவே வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (112)

# அரசாங்கம் – புலிகளுடன் ஒத்துழைத்து பிரச்சினையைத் தீர்க்க முயல்வோம்!

## கொழும்பு திரும்பும் வழியில் அமைச்சர் ஹக்கீம்



(கொழும்பு)

வட-கிழக்குப் பகுதிக்கென தனியான செயலணிக் குழுவொன்றை அமைப்பது தொடர்பாக இருந்து வந்த சந்தேகங்களைத் தாய்லாந்துப் பேச்சுக்கள் நீக்கியுள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நொகன்பத்தம் நகரில் பேச்சுக்களை முடித்து விட்டு கொழும்பு திரும்பும்போது செய்தியாளர்களிடம் பேசும்போதே முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப ஹக்கீம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு - கிழக்குக்கென கூட்டுச் செயலணி அமைப்பது உட்படப் பல விடயங்கள் தொடர்பாக மக்களுக்கு இருந்து வந்த சந்தேகங்களை தாய்லாந்து பேச்சுவார்த்தைகள் தெளிவுபடுத்தி விட்டன.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அரசியல் பிரச்சனைக்கு பரஸ்பர புரிந்துணர்வு மூலம் இரு தரப்பினரும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளர்கள். இது சம்பந்தமான விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் ஏழக்கூடிய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தாம் ஒத்துழைப்பு வழங்குவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதிக்குப் பாதுகாப்பு போதாது; அதிகரிக்குமாறு எம்.பிக்கள் கோரிக்கை!

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்றக் குழு கோரவுள்ளது.

தற்போது ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு போதுமானதல்ல என்றும் இதனால் அவரது உயிருக்கான அச்சுறுத்தலைக் கருத்திற் கொண்டு பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும் என்றும் பொதுஜனஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தவுள்ளனர்.

இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்திக்கும் போது பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இக்கோரிக்கையை முன்வைக்கும். அரசியல் ரீதியாக ஜனாதிபதியின் கரங்கள் வலுவடைந்துள்ளமையால் அவருககான அச்சுறுத்தல் அதிகரித்திருப்பதாகவும், புலிகள் தரப்பு இன்னொரு தேர்தலை விரும்புவதாலும் ஜனாதிபதியின் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டியிருப்பதாக அவர்கள் கருதுகின்றனர்.

இதேவேளையில் 19ஆவது அரசியல் திருத்தம் தொடர்பாக உயர் நீதிமன்றத் தீர்ப்பு வெளியான பின்னர் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு, ஜனாதிபதி சந்திரிகாவின் பாதுகாப்பை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அழிந்துபோன கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டம் தமிழர் தாயகத்தில் சிறிலங்கா படைநடவடிக்கைகளால் தொண்ணூறு சத வீதத்துக்கு மேல் அழிவுகளையும், பாதிப்புக்களையும் அனுபவித்தது. கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் தொகையில் 9 சதவீதமானோர் மட்டுமே இடம் பெயராதவர்கள் ஆவர்.

கிளிநொச்சியின் மக்கள் தொகையான 1 லட்சத்து 48 ஆயிரத்து 45 மற்றும் வெளியில் இடம்பெயர்ந்த 22 ஆயிரத்து 22 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும். மாவட்டத்தினுள் இடம்பெயர்ந்த 8169 குடும்பங்கள் அரச உதவிகளின்றி தமது இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளன. மாவட்டத்துக்கு வெளியே இடம் பெயர்ந்து சென்றவர்களில் 468 குடும்பங்களும் உதவிகளெதுவுமின்றி தமது இடங்களில் மீளக் குடியமர்ந்துள்ளன.

டத்தின் 2/3 பங்கு நிலம் படையினரின் வெடிபொருட்கள் விதைக்கப் பட்டுள்ளன. இவை முழுமையாக அகற்றப்படவில்லை. மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் வெடிபொருளகற்றலில் துரிதமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதுவரை மீள்குடியமர்ந்த குடும்பங்களில் சுமார் 2000 குடும்பங்கள் வெடிபொருள் அபாயம் நிறைந்த பகுதிகளில் மீளக்குடியமர்ந்தவையாகும்.

# சந்திக்கும் பிரச்சினைகள்

பேரில் - 27 ஆயிரத்து 510 பேர் மட்டுமே இடம் பெயராதவர்களாவர். இடம் பெயர்ந்தவர்கள் 1 லட்சத்து 20 ஆயிரத்து 535 பேராவர். இவர்களில் 1 லட்சத்து 9049 பேர் நிவாரணம் பெறுபவர்கள் ஆவர். கடந்த ஒகஸ்ட் வரை 55 ஆயிரத்து 776 பேருக்கு மட்டுமே நிவாரணம் வழங்க அரசு அனுமதித்திருந்தது.

இடம்பெயராத குடும்பங்களில் 4836 குடும்பங்கள் சமுர்த்தி உதவியைப்பெற தகுதிபெற்றபோதிலும் - இதுவரை அவர்களுக்கு அந்த உதவிகள் வழங்கப்படவில்லை. அத்துடன் சமுர்த்தி ஏற்பாடு எதுவும் இங்கு மேற்கொள்ளப்படவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்தினுள்

இந்தக் குடும்பங்களுக்கு மீள் குடியமர்வுக் கொடுப்பனவாக முதற் கட்டம் வழங்க தலா 15 ஆயிரம் ரூபாப்படி 129.55 மில்லியன் ரூபா தேவை. ஆனால் இதில் 7 மில்லியன் ரூபா மட்டும் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட நிலையில் - அது 483 குடும்பங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. ஆக 15 ஆயிரம் ரூபாப்படி முதற்கட்ட மீள்குடியமர்வு கொடுப்பனவு எஞ்சிய குடும்பங்களுக்கு வழங்க 122.55 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது.

இப்பொழுது மீள்குடியமர்வில் உள்ள பௌதீகப் பிரச்சினையும் தலை காட்டுகின்றது. கிளிநொச்சி மாவட்

ஆகவே வெடிபொருட்களில் மக்கள் சிக்கினால் அவர்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்க 2 அம்புலன்ஸ்களாவது தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தவிர கடந்த போரில் கொல்லப்பட்ட மக்களுக்கு உதவி வழங்க 41.183 மில்லியன் ரூபா தேவை. இந்த தொகை இது வரை போரிலான இறப்புகள், காய மடைதல் தொடர்பான பதிவுகளை செய்தோர்க்கு ஆனதாகும். இனி மேல் 200 முதல் 300 பேர் வரையானோர் இத்தகைய பதிவுகளை செய்யலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இதுவரை பதிவுகளின்படி கிளிநொச்சி மாவட்டத்தில் போரிலான இறப்புகளால் பாதிக்கப்பட்டோரில் 358 பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வதம் 8.95 மில்லியன் ரூபாவும், 292 பேருக்கு 50 ஆயிரம் ரூபா வீதம் 14.6 மில்லியன் ரூபாவும், 94 பேருக்கு 1 லட்சம் ரூபா வீதம் 9.4 மில்லியன் ரூபாவும் காயமடைந்த 75 பேருக்கு 1.63336 மில்லியன் ரூபாவும் (மரண செலவுக்கு) 660 பேருக்கு 2000 ரூபா வீதம் 6.6 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட வேண்டும்.

# நிமிர்ந்துகொள்ள

கிளிநொச்சி மக்களள் மீளக் குடியமர்வுக்கு முன்பாக உள்ள [illegible]ச சனைகள் இவை.

- அறிதி

# கல்விப்பணியில் 127 ஆண்டுகளைக் கடந்துவிட்ட யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்

கத்தோலிக்க திருச்சபையில் புனிதராகப் போற்றப்படும் ஒருவரான "சாள்ஸ் பொரோமி" அவர்களின் திருநாமத்தைத் தாங்கிய வண்ணம், பாப்பவர் நெஞ்சங்களை படித்த பாசத்தை நினைவூட்டி நிமிர்ந்து நிற்கின்ற "புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்" இன்று 127வது ஆண்டில் கால்தடம் பதித்து நிற்கின்றது.

ஒரு பெரும் காலப்பகுதியில் மாமரச்சோலையின் மத்தியில் ஓர் ஓலைக் குடிசையாக ஆரம்பமாகிய பாடசாலை, நூற்று நாற்பது மாணவர்களையன்று சுமந்து வந்த சிறிய பாடசாலைதான். "மாவடி" என்ற பெயரோடு புகழ் பூத்து விளங்கியதொரு காலம்மாறி, கல்வி வளர்ச்சியில் முறுக்கேறி படிப்படியாகப் பல வழிகளிலும் பல வளர்ச்சி கண்டு ஆயிரத்து ஐநூறு மாணவர்களுடன் இருந்து தற்போது எண்ணூற்று ஐம்பது மாணவர்களோடு மூன்று மாடிக்கட்டடத்துடன் நிமிர்ந்து நிற்கின்ற நிலையைக் காண்கின்ற போது "எமது பள்ளிக்கூடம்" என்று பெருமையோடு சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுகிறோம்.

புனித சாள்ஸ் மகாவித்தியாலயமானது 1876ஆம் ஆண்டு கத்தோலிக்க திருச்சபைகளின் ஒன்றான சங்கைக்குரிய திருக்குடும்ப கன்னியர்சபையினரால் ஆரம்பிக்கப்பட்டது. 1938ஆம் ஆண்டளவின் பின்பு இப்பாடசாலையின் துரித வளர்ச்சிகண்டு பங்குத்தந்தை வண.கில்லறி அடிகளார் கல்வி வளர்ச்சிக்காகவும், பாடசாலையின் தரமுயர்விற்காகவும் பல வழிகளிலும் அக்கறை காட்டி, அயராது உழைத்தவர். பங்குத் தந்தையின் அயராத உழைப்பு வீண்போகவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக 1940 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதரம் வரை உயர்த்தப்பட்டு பாடசாலையின் வளர்ச்சிப்பாதையில் புதிய மைல்கல்லை பதித்தது. பின்பு 1990 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரம் வரை உயர்த்தப்பட்ட நிலை பாடசாலையின் முழுமை பெற்ற ஓர் நிலையாகும்.

இப்பாடசாலை பொருளாதார ரீதியில் பின்தங்கிய பாடசாலை என்பதே உண்மையாகவிருந்தாலும், மாணவர்களின் கல்விப்பாதையில் பற்பல முன்னேற்றங்களைப் பல தடைகள் மத்தியிலும் எதிர்நோக்கி கல்வி உலகின் கலங்கரை விளக்காக வழிகாட்டி வருவதைக் காணுகின்றோம்.

இப்பாடசாலை மாணவர்களை மட்டும் சுமந்து வந்ததல்ல. நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்தம் காரணமாக யுத்தத்தினால் நெருக்கடிகள் ஏற்படுகின்ற அவ்வப்போது அகதிகளாக அவலப்பட்டு தஞ்சமென ஓடிவந்த மக்களை அரவணைத்து, அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்து ஆறுதலுக்கு வழி வகுத்த ஓர் ஆலயம் என்றே சொல்லலாம். இப்படிப்பட்ட யுத்தமுனையிலும் இப் பாடசாலை கல்விமான்களையும், கத்தோலிக்க திருச்சபைக்கு குருக்களையும், நல்ல நல்ல மனிதாபிமானமுள்ள சிறந்த மனிதர்களையும் தந்து உருவாகி இன்று தனது 127 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகின்றது.

~ S.B.பீற்றர்போல்.

# "சைவப்பெருமக்களின் வாழ்வில் பலபெருமைகளைச் சேர்க்கும் கந்தசஷ்டி"



விரதங்கள் மன ஒருமைபபாட்டிற்காக மேற்கொள்ளப்படுவன. விரதங்கள் என்ற சொல்லுக்கு மேற்கொள்ளப்படுவன அல்லது வரிக்கப்படுவன என்பது பொருள். உடலிலுள்ள வலிமை உள்ளத்தைப் பொறிவழியாகப் புலனை வழிப்படுத்தும். உடலை வயப்படுத்தி உண்டி சுருங்குதலும், உண்டி ஒழித்தலும் வேண்டும். விரதங்கள் உடலின் வன்மைக்கு ஏற்ப மேற்கொள்ளப்படுவனவாகும். "உடலளவு விரதம்" என்பது பழமொழி.

ஊனினை உருக்க உள்ளொளி பெருகும். உள்ளொளியே இறை விளககம். இறை விளக்கமே கருணையின் பொலிவு. மக்கள் எதிர்நோக்குவதெல்லாம் கருணையின் பொலிவால் கவலையற்ற வாழ்வும், என்றும் மாறாத இன்பப்பேறுகளுமே. இவற்றை எளிதில் அடைவிப்பன விரதங்களே. விரதங்களில் முருகனைப் பற்றியன மூன்று.

அவை: வாரவிரதம், நாள் விரதம், பட்சவிரதம் என்பனவாகும். முருகன் விரதங்களாகிய மூன்றும் எள்ளளவும் நெறிபிழையாமல் விதிப்படி அனுட்டிக்கத்தக்கன.

### வெள்ளி விரதம்:

(ஐப்பசி வெள்ளிதோறும் அனுட்டிக்கும் விரதம்)

வாரவிரதங்களுள் வெள்ளி விரதம், ஐப்பசி மாதம் முதல் வெள்ளி தொடங்கி வெள்ளிதோறும் மேற்கொள்ளத்தக்கது. இந்த விரதத்தை மேற்கொண்டவர்களில் பகீரதன் சிறந்தவன். பகீரதன் ஆட்சிக்காலத்தில் உலகத்தைக் கோரன் என்னும் அசுரன் கவர்ந்து கொண்டான். பகீரதன் மனைவி மக்களோடு காட்டுக்குப் போனான். பார்க்கவர் என்னும் முனிவர் அவன் நிலையைக் கண்டு "நீ மூன்றாண்டு வெள்ளி விரதம் நோற்பாயாக, உன் பகை ஒழியும், அரசு எய்தலாம் என்று அறிவித்தார். பகீரதன் அங்ஙனமே விரதத்தை முறைப்படி மேற்கொண்டு அரசு எய்தினான்.

### கார்த்திகை விரதம்:

கார்த்திகை மாதக் கார்த்திகை முதலாக கார்த்திகை நட்சத்திரங்கள் தோறும் பன்னிரண்டாண்டு மேற்கொள்ளத்தக்க விரதம். இந்த விரதத்தை அந்தணன் ஒருவன் நோற்று மனுமன்னனாகி உலகாண்டான். மற்றொரு மறையவன் நோற்று நினைத்தன யாவும் நிறைவேறப் பெற்றான். இங்ஙனம் கார்த்திகை விரதத்தை முறைப்படி நோற்றுக் கரையேறியவர்கள் எண்ணிக்கை கணக்கிலடங்காதது.

### கந்தசஷ்டி விரதம்:

இவ்விரதம் ஐப்பசி மாதத்துச் சுக்கில பட்சத்துச் சஷ்டி தொடங்கி ஓராண்டில் வரும் இருபத்து நான்கு சஷ்டிகளிலும் அனுட்டிக்கப்படுவது. ஐப்பசி மாதத்துச் சஷ்டியே ஸ்கந்தசஷ்டி எனச் சிறப்பித்துப் பேசப்படுவது. இது சுக்கிலபட்சப் பிரதமை முதல் ஆறு நாளும் உமிழ் நீரும் உள்ளே விழுங்காதபடி அனுட்டிக்கத்தக்கது. இவ்வண்ணம் செய்ய இயலாதவர்கள், நண்பகலில் ஒவ்வொரு முறை ஆறு மிளகையும், ஆறுகை நீரையும் அருந்தலாம்.

ஸ்கந்தசஷ்டி விரத நாட்களில் ஒவ்வொருநாளும் விடியற்காலை நாலுமணிக்கு எழுந்து, நாட் கடன்களை முடித்துக்கொண்டு திருநீறு பூசி, வடதிசை நோக்கியேனும் தென்திசைநோக்கியேனும் இருந்து முருகனைத் தியானித்து, பின்னர் விதிப்படி சிவதீர்த்தத்திலேனும், காவிரி, கங்கை முதலிய புண்ணிய ஆறுகளிலேனும் நீராடி, தோய்த்துலர்ந்த ஆடைகள் உடுத்திக்கொண்டு, அனுட்டானங்களைச் செய்து முற்கூறியபடி தம்பத்திலும், விம்பத்திலும், கும்பத்திலும் முருகனையே வழிபட்டு, இரவில் நற்பிரசாதம் நிவேதித்து விதிப்படிப் பூசை செய்தல் வேண்டும். ஏழாம் நாட்காலையில் விதிப்படிச் சிறப்பு வழிபாடுகள் ஆற்றி சிவனடியாருடனிருந்து பாரணம் செய்தல் வேண்டும். இவ்விரதத்தை முறைப்படி நோற்றுப் பயன் எய்தினோர் பலர். எய்துவோர் பலர். தேவர்கள் இங்ஙனம் வழிபட்டே இழந்த பதவியைப் பெற்றனர். இவ்விரதங்களை ஒருமனப்பாட்டுடன் மேற்கொள்ளுவோர் எல்லா இன்பங்களையும் எய்தி இன்புறுவர்.

இன்று செவ்வாய்க்கிழமை கந்தசஷ்டி விரதம் ஆரம்பமாகின்றது. இவ்விரதத்தினை ஏராளமான இந்துக்கள் அனுட்டித்து மகிழ்வர். கந்தபுராணகலாசாரத்தை தன்னகத்தே கொண்டு, பழம் பெருமைகளோடு விளங்கும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில், தொண்டைமானாறு செல்வச சந்நிதி அன்னதாகக் கந்தனின் ஆலயத்தில், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் இன்னும் முருகன் தலமெங்கும் பக்திபூர்வமாக இவ்விரதம் காலந்தோறும் அனுட்டிக்கப்படுகின்றது.

எனவே "மண்ணில் நல்ல வண்ணம் வாழும்" மாண்மைபெற்று வாழ கந்தசஷ்டி விரதம் அனுட்டித்து மகிழவோம்.

- மதுரகவி.




நமது ஈழநாடு

நடாத்தும்

க.பொ.த(சா/த) பரீட்சைக் கருத்தரங்கு - 2002



2002 க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தயாராகும் மாணவமணிகளே!

உங்களுக்காக வெகுவிரைவில் பரீட்சைக் கருத்தரங்கு ஒன்றை யாழ். நகரில் நடத்தவுள்ளது. பரீட்சைக்கு ஆயத்தமாகி வரும் உங்களுக்காக அனுபவமிக்க ஆசான்கள் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டு ஆலோசனைகள், மாதிரி வினாத்தாள் பயிற்சி ஆகியவற்றை வழங்கவுள்ளனர்.

இக் கருத்தரங்கில் பங்கு பற்றி பயன் பெற விரும்பும் மாணவர்கள் கீழ்வரும் படிவத்தை பூர்த்தி செய்து அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக

மாணவர் மலர் பரீட்சைக் கருத்தரங்கு,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வரவை உறுதிப்படுத்த இப் பத்திரத்தை அனுப்பி வைப்பது அவசியமாகும். பிரவேசம் இலவசம். தேவையான காகிதாதிகள் வழங்கப்படும்.

பரீட்சைக் கருத்தரங்கு தொடர்பான முழுமையான விபரங்கள் வெகுவிரைவில் நமது ஈழநாடு பத்திரிகையில் வெளிவரும்



நமது ஈழநாடு

க.பொ.த(சா.த) பரீட்சைக் கருத்தரங்கு -2002
பங்கு பற்றுவதற்கான விண்ணப்பம்

முழுப்பெயர்:------------------------------------------

முகவரி:------------------------------------------

பாடசாலை:------------------------------------------

பங்குபற்ற விரும்பும் பாட அமர்வுகள்:--------------------

(தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சமூகக்கல்வி
வணிகவியல் பாடங்களுக்கான அமர்வுகளே நடைபெறும்) --------------------
ஒப்பம்

# பயணிகள் எமது நாடுகளுக்கு வருவதைத் தடுக்க வேண்டாம்!

## - 'ஆசியான்' நாடுகள் சர்வதேசத்திடம் கோரிக்கை -



பாலித்தீவு பாதுகாப்பாக இருப்பதாக காட்ட முனைகிறது இந்தோனேசியா

(நொம் பென்)

தென்கிழக்காசிய நாடுகள், உலகிலுள்ள ஏனைய நாடுகளிடம் - தங்கள் நாடுகளுக்கு வரும் உல்லாசப் பயணிகளைத் தடுக்க வேண்டாம் எனக் கோரியுள்ளன. பாலித் தீவுகளில் அவுஸ்ரேலிய பயணிகளைப் பலிகொண்ட குண்டுவெடிப்பினைத் தொடர்ந்து, மந்தகதியடைந்த உல்லாசப் பயணிகளின் வருகையையொட்டியே இந்த அறிவிப்பு வெளியிடப் பட்டுள்ளது.

ஐரோப்பிய அரசாங்கங்கள் - தமது பிரஜைகளை தென்கிழக்காசியாவுக்கு போக வேண்டாம்; அங்கு தீவிரவாத அச்சுறுத்தல் இருப்பதாக எச்சரித்துள்ளன. இதையடுத்து - பெனம் பெத் (phnom Penh) இல் இரண்டு நாட்களாக நடந்த ஆசியான் மகாநாட்டிலேயே தென்கிழக்காசிய நாட்டுத்தலைவர்கள் கூட்டாக மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இத்தடவை ஆசியான் மாநாட்டிலே சீனா, ஜப்பான் மற்றும் தென்கிழக்காசிய நாடுகளும் கலந்து கொண்டன.

இரண்டு நாட்கள் நடைபெற்ற ஆசியான் மாநாட்டில் உலகிலேயே மிகப்பெரிய வர்த்தக வலயத்தினை, இரண்டு மில்லியன் மக்களைக் கொண்ட சனத்தொகையுடன் உருவாக்குவது பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளது. பாலித்தீவுகளின் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து, இப் பிராந்தியத்திலே பல மில்லியன் டொலர்களை வருவாயைத் தந்த கைத்தொழிலான உல்லாசப் பயணத்துறை மிகவும் வீழ்ச்சியடைந்தது.

மேலும் தென்கிழக்காசிய நாடுகளிலே பாதுகாப்பு நிலைமைகள் மற்றும் பாதுகாப்பு படைகளின் செயற்திறன் மிகவும் குறைந்த நிலையிலேயே இருப்பதும் வெளியாகியுள்ளது.



எங்கும் எதிலும் பாதுகாப்பு

பாலித்தீவுக் குண்டு வெடிப்புத் தொடர்பாக அமெரிக்க புலனாய்வுத் துறையினர், இந்தோனேசிய பாதுகாப்பு படையினருக்கு எச்சரிக்கை செய்திருந்தபோதும், அதனை இந்தோனேசிய அரசாங்கம் அசட்டை செய்துவிட்டதாக அமெரிக்காவும் ஏனைய மேற்கு நாடுகளும் குற்றம் சுமத்தியுள்ளன.

இதேவேளை - இராணுவ நிபுணர்கள், தென் கிழக்காசிய நாட்டு இராணுவத்தினர் மிகவும் மந்தமான பயிற்சிகளையும் ஊழல் நிறைந்த இராணுவக் கூட்டமைப்புக்களையும் கொண்டிருப்பதாக தெரிவித்துள்ளனர்.

ஆசியான் கூட்டமைப்பில் புருணை, கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, மியன்மார், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


## விண்ணப்ப முடிவுத் திகதி திருத்தம்

இன்றைய பத்திரிகையின் 8ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள க.பொ.த. (சா/த) பரீட்சைக் கருத்தரங்கு அறிவிப்பில், விண்ணப்ப முடிவுத் திகதி அடுத்தமாதம் 15ஆம் திகதி எனத் தவறாக அச்சேறியுள்ளது. அதை இம்மாதம் 15ஆம் திகதி எனத் திருத்தி வாசிக்கவும்.


## உலகவலம்

## சீனக்கடலில் மோதல் தவிர்ப்பு உடன்படிக்கை

நேற்று சீனாவிற்கும் தென்கிழக்காசிய நாடுகளுக்கும் இடையில் தென் சீனக்கடலில் பகிரங்க மோதல் தவிர்ப்பு உடன்படிக்கை ஒன்று ஆசியான் மாநாட்டில் ஏற்பட்டுள்ளது.

தென் சீனக்கடலில் உள்ள 'ஸ்பிரட்னிக்' தீவுகள் யாருக்குச் சொந்தம் என்பதில் பிராந்திய மோதல் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் தோன்றியிருந்தன. ஒரு தடவை இத்தீவுகள் தொடர்பாக சீனாவிற்கும் வியட் நாமிற்கும் இடையில் யுத்தம் வெடிக்கும் அபாயம் தோன்றியதும் குறிப்பிடத்தக்கதாகும். இதையடுத்தே புதிய உடன்படிக்கை கைச்சாத்தாகியுள்ளது.

# அலாஸ்காவில் பாரிய பூமி அதிர்ச்சி நெடுஞ்சாலைகளுக்கு பெரும் சேதம்

## - இவ்வாண்டிலேயே மிக உயர் அளவு எனத் தகவல் -

இவ்வருடத்தின் மிகவும் பாரிய பூமியதிர்ச்சி மத்திய அலஸ்கா பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது. இப்பூமியதிர்ச்சி றிச்டர் அளவுகோலில் 7.9 வீதமாகப் பதிவாகியுள்ளது.

பெருந்தெருக்களுக்குப் பாரிய சேதங்கள் ஏற்பட்டபோதும், உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லையெனத் தெரியவருகின்றது. அமெரிக்கப் புவியியலாளர்கள் கருத்து வெளியிடுகையில் - புவிநடுக்கத்தின் மையத்திலிருந்து 120 கிலோ மீற்றர்களுக்குத் தாக்கங்கள் தெரிந்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

இப் புவிநடுக்கம் G.M.T நேரப்படி நேற்று 22.00 மணிக்கு நடைபெற்றுள்ளது. அலஸ்கா புவிகாப்புத் தகவல் மையம் கருத்து வெளியிடுகையில்- நாடு பூராவும் தாக்கம் உணரப்பட்டதாகத் தெரிவித்துள்ளது.

எனினும் -

அலஸ்காவின் தேசிய எல்லைகளைக் கடந்து செல்லும் எண்ணெய்க் குழாய்களுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை எனத் தெரியவருகின்றது. அலஸ்கா பொறியியலாளர்கள் போதியளவு அதிர்ச்சிகளைத் தாங்கும் குழாய்களைப் பொருத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.



நெடுஞ்சாலையைத் துண்டாடியது நிலநடுக்கம்

1964இல் வட அமெரிக்காவைப் பூமியதிர்ச்சி தாக்கியதன் பின்னர் இவ்வருடமே மிகப் பெரிய பூமியதிர்ச்சி இடம் பெற்றுள்ளது. அப்போது றிச்டர் அளவுகோலில் 9.2 வீதம் பதியப்பட்டிருந்தது.

# நம்பிக்கையில்லாப் பிரேரணை எதிர்கொள்கிறார் ஷரோன்!

(ஜெருசலேம்)

இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் பிரதமர் ஏரியல் ஷரோன் நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்கின்றார். ஆனால், இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஷரோன் வெற்றியடைவார் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு வெற்றியடையும் பட்சத்தில் வலதுசாரிக் கூட்டமைப்பு 2003ம் ஆண்டில் நடக்கவுள்ள அடுத்த தேர்தல் வரை ஆட்சியில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வலதுசாரி கூட்டமைப்பினர் 2003 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இஸ்ரேலியப பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். இவ்வாறு 2003 ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்படுமாயின், சர்வதேச நிதி நிறுவனங்களுடன் சுமுகமான உறவு நிலையை பேணக் கூடியதாக இருக்கும் என ஷரோனின் லிக்குயிட் கட்சியினர் நம்புகின்றனர்.



பலஸ்தீனரைச் சோதனையிடும் இஸ்ரேல் வீரர்

பலஸ்தீனர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் இஸ்ரேலிய அரசாங்கம், சர்வதேச சமூகத்திடம் பல மனஸ்தாபங்களைப் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.


உங்கள் அன்புச் செல்வங்களின்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நமது ஈழநாட்டில்!

முற்றிலும் இலவசமாக!!

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின்
பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "நமது ஈழநாடும்" இணைகின்றது!
உங்களது சிறாரின் புகைப்படத்துடன்
கீழ்வரும் கூப்பன்களில் மூன்றினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள்!
உங்கள் செல்வத்தின் பிறந்த நாளன்று நமது ஈழநாடும்,
புகைப்படத்துடன் பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும்.

வாழ்க வளமுடன்!



சிறாரின் பெயர் :........................................

முகவரி :........................................

பிறந்த ஆண்டு :........................................

கூப்பன்கள் மூன்றும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

........................................

பெற்றார் ஒப்பம்


# துருக்கித் தேர்தல் முடிவுகள்; தனிக்கட்சி ஆட்சியமைக்கிறது!



(துருக்கி)

துருக்கியில் இஸ்லாமிய அடிப்படைவாத நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது. துருக்கியில் கடந்த பதினைந்து வருடங்களின் பின் தனிக்கட்சியொன்று அரசமைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். 34.2% வாக்குகளைப் பெற்ற நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி தெளிவான பெரும்பான்மையை பெற்றுள்ளது. பாராளுமன்றத்தில் மொத்தமாக உள்ள 550 ஆசனங்களில் 363 ஆசனங்களை நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி பெற்றுள்ளது. மேற்படி கட்சி, துருக்கியின் அரசியலமைப்பை மாற்றுவதாயின் 2/3 பெரும்பான்மை கிடைக்க வேண்டும். ஆனால், 2/3 பெரும்பான்மைக்கு ஒரு சில ஆசனங்களே போதாத நிலை இருப்பதாக மேற்படி கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஆனால் அடுத்த தேர்தலில் தங்களால் தனித்து நின்று 2/3 பெரும்பான்மையை பெற்று அரசியற் திட்டத்தை மாற்ற முடியும் என அவை கூறுகின்றன.

துருக்கியில் இஸ்லாமிய அடிப்படைவாத நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி வெற்றி பெற்றுள்ளமையானது மதச்சார்பின்மைக்கும் ஜனநாயகத்துக்கும் எவ்வித அச்சுறுத்தலாகவும் அமையாது என நம்பிக்கையுடன் இருப்பதாக எதிர்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியினது தலைவர் எர்டோமோன்- கடந்த இரண்டு வருடகாலமாக நிலவி வந்த பொருளாதார நெருக்கடியினால் மக்கள் பாதிக்கப்பட்டமையால்தான், மக்கள் தமது கட்சியை வெற்றி பெறவைத்துள்ளதாக தெரிவித்த அதேவேளை- மக்களது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற வேண்டிய பாரிய பணி தம்மிடமுள்ளதாகவும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

COMPUTER ELECTRONIC SYSTEMS (PVT) LTD

- கணினியில் முன்னனுபவம் இல்லாதவர்களிற்கு தனிப்பட்ட முறையில் விசேட கவனம் செலுத்தப்படும்.
- சிறுவர்களிற்கான அறிமுக வகுப்புக்கள், games, மற்றும் விசேட வகுப்புக்கள்.

கணினி உலகில் முன்னணியில் திகழ இன்றே நாடுங்கள்!!

CES

விண்ணப்ப முடிவுத் திகதி:
15.12.2002

Computer Electronic Systems (Pvt) Ltd.
No.223,Kasthuriyar Road,
Jaffna.
(Opposide of J/Hindu Primary School)

# புனர்வாழ்வுக் குழுவில் அங்கத்துவம்; பிரச்சினையைக் கிளப்ப சிலர் சதி!

## - அமைச்சர் ரவூப் குற்றச்சாட்டு -

(கொழும்பு)

தாய்லாந்துப் பேச்சுக்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள புனரமைப்பு - புனர்வாழ்வுக்கான உபகுழுவில் அம்பாறை முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எவரும் இடம்பெறவில்லையென சிலர் வேண்டுமென்றே பிரச்சினைகளைக் கிளப்புவதாகவும் இவ்வாறு தேவையற்ற சந்தேகங்களை ஏற்படுத்தும் சக்திகளுக்கு எவரும் இடம் தரக்கூடாதென்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தாய்லாந்திலிருந்து திரும்பிய பின் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கும் போது - தாய்லாந்தில் நடைபெற்ற பேச்சுக்களில் முஸ்லிம்களுக்கு அனுகூலமான, முன்னேற்றகரமான அம்சங்கள் இடம்பெற்றன.

முன்னர் எடுத்த தீர்மானங்கள் பலவற்றில் மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன. முஸ்லிம்களின் பிரச்சினைகள் உள்வாங்கப்பட்டுள்ளன. உபகுழுக்களில் முஸ்லிம்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

# விபுலானந்தர் வீதியிலிருந்து படையினர் அகன்றனர்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை விபுலானந்தர் வீதிப் பகுதியில் கடந்த 2000ம் ஆண்டு முதல் வீடுகளில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் அங்கிருந்து வெளியேறி வீடுகளை உரிமையாளர்களிடம் ஒப்படைத்தனர். அப்பகுதியிலிருந்த இராணுவ முகாம்கள் யாவும் அகற்றப்பட்டு சுவாமியார் வீதிக்கு மாற்றப்பட்டுள்ளன.

கொழும்புத்துறை குருக்கள் இல்லத்திலிருந்த பௌத்த விகாரையும் சுவாமியார் வீதிக்கு மாற்றப்பட்டது.

வீட்டுரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்ட வீடுகளில் பெறுமதி வாய்ந்த பல பொருட்கள் காணாமல் போயுள்ளதோடு வீட்டு மின் இணைப்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை-

சுவாமியார் வீதியிலுள்ள முகாம்கள் யாவும் இன்னும் ஓரிரு தினங்களில் விடுவிக்கப்படும் என்றும் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(60)

# தாய்லாந்துப் பேச்சுக்களை அவதானிக்கிறாராம் கதிர்காமர்

(சென்னை)

தாய்லாந்துப் பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்து உன்னிப்பாக அவதானித்து வருகிறேன் என முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடையே கதிர்காமர் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணமாக சென்று அங்குள்ள சில தலைவர்களைச் சந்தித்துள்ள கதிர்காமர் . வடக்கு- கிழக்கில் புலிகள் ஏனைய அரசியல் கட்சிகள் தொடர்பாக கொண்டிருக்கும் நிலை என்ன என்பதையும் அறியவிரும்புகிறேன் எனவும் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

# கொழும்புத்துறையில் இரவு நேரங்களில் திருட்டு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறைப் பகுதியில் இரவு நேரங்களில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இப்பகுதியில் காணப்படும் பழுதடைந்த மின்கம்பங்கள் இரவு வேளைகளில் உடைக்கப்பட்டு அதனுடைய கம்பிகள் விற்பனைக்காக எடுக்கப்படுவதோடு, யுத்த நிலைமைகள் காரணமாக உடைந்துபோன வீடுகளில் கற்கள், நிலைகள், ஓடுகள் என்பனவற்றையும் சிலர் இரவுவேளைகளில் திருடிச்செல்கின்றனர்.

(60)

# குமுதினிப்படகு இன்றுமுதல் சேவையில்

(ஊர்காவற்றுறை)

குமுதினிப் படகுத் திருத்தப் பணிகள் நேற்றுடன் நிறைவடைந்துள்ளதையடுத்து இன்று சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

நெடுந்தீவுக்கும் குறிக்கட்டுவானுக்கும் இடையில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வந்த குமுதினி படகுச் சேவை கடந்த மூன்றரை மாத காலமாக தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(51)

# பண்ணையூடாகச் செல்ல அனுமதியில்லை

(சுதுமலை)

கடந்த காலங்களில் சொல்லொனாத் துன்பங்களை அனுபவித்து வந்த சாவற்கட்டு கடற்தொழிலாளர் சமாதானச் சூழ் நிலையில் பண்ணைப் பாலத்தினூடாக சென்று மீன்பிடித்தொழில் மேற்கொள்ள உரியவர்களிடம் விண்ணப்பித்திருந்தும் அதற்கு அனுமதி இன்னும் கிடைக்கவில்லை. (91)

## தமிழ்ச்செல்வன்...

யக்க விமானநிலையத்தை வந்தடைந்தனர்.

இதேவேளை - அமைச்சர் மிலிந்த மொறகொட அமெரிக்காவுக்கு சென்றிருக்கின்றார் எனத் தெரியவருகின்றது.

## ஓடித் திரிந்த...

கியதும் அங்கு கடமையிலிருந்த ஊழியர்கள் தம்மைக்காத்துக் கொள்வதற்காக மிரண்டு அங்குமிங்குமாக ஓடத்தொடங்கினர். இதனால் அவசர சிகிச்சைப்பிரிவு பெரும் அல்லோல கல்லோலப்பட்டது. ஐந்து நிமிட நேரமாக நீடித்த இந்த நிலைமையினால் நான்கு பேர் காயமடையவும் நேரிட்டது. சின்னத்துரை ஜெயகுமார் (31), ஜெயராஜா ரூபி (36), கதிரவன் மகேஸ்வரி (27), சிவராஜா(30) ஆகிய வைத்தியசாலை ஊழியர்களே காயமடைந்தவர்களாவர். (லி,55)

## பௌத்த...

ரிய பீடாதிபதி ரம்புகல விபஸி தேரர் பாராட்டியதாக தெரிவிக்கப்படுகிறது.

மல்வத்தை பீடாதிபதி புத்தரக்கித தேரரையும் அமைச்சர் சந்தித்தார். புலிகள் தலைவர் பிரபாகரனுக்கு எதிரான 200 வருட சிறைத்தண்டனை சமாதான பேச்சுக்களை எந்தவிதத்திலும் பாதிக்காது என இச்சந்திப்பின போது அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

## அரசின்...

ஆயுதங்களை பொலிசார் கைப்பற்றியமையும், புலிகள் சொல்வதைக் கேட்டு இதுவரை 353 படைமுகாம்களை அரசு மூடியுள்ளமையும்தான் இராணுவத்தைப் பலவீனப்படுத்தக் கூடியவை. ஜனாதிபதியின் அறிவிப்பை அரச பத்திரிகைகள் திரிபுபடுத்தி செய்திகள் வெளியிடுகின்றன எனவும் மங்கள சமரவீர குற்றம் சாட்டினார்.

எட்டு இராணுவ உயரதிகாரிகளுக்கு பதவி உயர்வுடன் சேவை நீடிப்பு வழங்க ஜனாதிபதி சந்திரிகா மறுத்துள்ளதாக அண்மையில் செய்தி வெளியானதும் அதை ஜனாதிபதி செயலகம் பின்னர் மறுத்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஆயுதக் கொள்வனவு...

சம்பாப்வேயிலிருந்தான 32 A00 81 எம்.எம் மோட்டார் குண்டுகள் கொள்வனவு, அமெரிக்காவிலிருந்து சி 130 ரக விமானங்கள் இரண்டின் கொள்வனவு, உக்ரேனிலிருந்தான எம்.ஐ. 24 ரகக் ஹெலிகொப்ரர்களின் கொள்வனவு என்பவை பற்றியே புதிய விசாரணை நடத்தப்படவுள்ளது.

துலிந்த வீரசூரியா தலைமையிலான இரகசியப் பொலிஸார் இந்த விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த ஆயுதக் கொள்வனவு நடைபெற்றபோது - முப்படைகளின் பிரதம தளகர்த்தராகவிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜெனரல் அனுருத்த ரத்வத்த ஆகியோர் - நேரடி சட்ட விசாரணைகளுக்கு ஆளாவார்கள் எனத் தெரியவருகின்றது.

யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்களுக்கு நமது ஈழநாட்டின் இலவசப் பிரதிகள்!

யாழ்.மாவட்டத்திலுள்ள 50 சனசமூக நிலையங்களுக்கு
'நமது ஈழநாடு'
ஒரு மாதகாலத்திற்கு இலவசப்பிரதிகளை அனுப்பவுள்ளது.

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்

கீழுள்ள கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எதிர்வரும் 15.11.2002 ற்கு முன்னதாக
'நமது ஈழநாடு' -
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

- குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 50 சனசமூக நிலையங்களின் விபரம் 17ஆம் திகதிய நமது ஈழநாட்டில் வெளியாகும்.
- தேர்ந்தெடுக்கப்படும் சனசமூக நிலையங்களுக்கு வரும் 20.11.2002 இலிருந்து 20.12.2002 வரை இலவசப் பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

உங்களுக்கான கூப்பன் இதோ!

நமது ஈழநாடு இலவசப் பிரதித் திட்டம்

சனசமூக நிலையத்தின் பெயர் : ..............................
பதிவு இலக்கம் : ..............................
முகவரி : ..............................
நூல் நிலைய வசதி : உண்டு / இல்லை
இலவசப்பிரதியை பெறக்கூடிய அருகிலுள்ள 'நமது ஈழநாடு' பத்திரிகை முகவர்
: ..............................

.............................. ..............................
தலைவர்/ செயலாளர் ஒப்பம் திகதி
(சனசமூக நிலைய முத்திரையுடன்)

## கலகலப்பாக...

நடைபெற்றுள்ளதாக எமது பிரதேச செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தாவடியில் இடம்பெற்ற கைகலப்பில் - சீவல் தொழிலாளியான சண்முகராசா செல்வகுமார்(28) நெஞ்சுப் பகுதியில் போத்தல் குத்திற்கு இலக்காகியுள்ளார். ஐந்து சந்திப் பகுதியில் இடம்பெற்ற கைகலப்பில் இராசதுரை சுதாகரன் (18) தாடைப் பகுதி, கண் இமைப்பகுதியில் கத்திக குத்துக்கு இலக்காகியுள்ளார்.

மந்துவில் மீசாலையில் இடம் பெற்ற சம்பவத்தில் - குணம் நந்தகுமார் (23) என்பவர் படுகாயமடைந்தார். இதேவேளை- கொடிகாமம் பகுதியில் இடம்பெற்ற தட்டிவான் விபத்தில் சிக்கி கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய மாணவன் சின்னத்துரை கருணாகரன் (18) சுயநினைவிழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அதேவேளை -யாழ்.நகரில் நேற்றும் கூட பல கடைகள் திறக்கப்பட்டு அமோகமான புடவை வியாபாரமும் நடைபெற்றது. (லி,111)

## மக்கள் குடியிருப்பில்...

தாய்லாந்தில் சமாதான பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தவேளையில் கூட, வலிகாமம் வடக்கில் பொதுமக்களின் குடியிருப்புக்களை படையினர் புல்டோசர் கொண்டு தகர்த்து வருகின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டதன் நோக்கங்களில் ஒன்று வட. - கிழக்கு பகுதிகளில் இயல்பு நிலையை தோற்றுவிப்பதேயாகும். ஆனால் இதுவரை முழுமையான சகஜநிலை வட. - கிழக்கில் உருவாக்கப்படவில்லை. அதேவேளை நாட்டின் தென்பகுதியில் புரிந்துணாவு ஒப்பந்தத்திற்கு பின்னர் எந்தவிதமான அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை. எமது பகுதியில் சகஜ நிலை தோன்றாமைக்குக் காரணம் உயர் பாதுகாப்பு வலயமும் படையினரின் முகாம்களுமேயாகும். எனவே இவை உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

இவ்வாறான பல பிரச்சினைகள் எமது பகுதிகளில் உள்ளன. இருந்தாலும் கூட சமாதான முயற்சிகள் முன்னெ டுக்கப்பட வேண்டும் என்பதற்காக ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத் திற்கு தொடர்ந்து எமது ஆதரவை நாம் தெரிவிப்போம். தற்போதைய அரசாங்கத்தை நீக்கவோ அல்லது கவிழ்க்கவோ எடுக்கப்படுகின்ற எந்த முயற்சிக்கும் நாங்கள் ஆதரவளிக்க மாட்டோம்.

எனினும் -

தற்போது சமாதான சூழலில் விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையே சமாதான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இந்நேரத்தில், படிப்படியாக அமைதி நிலை ஏற்பட்டு வரும் இந்தச்சூழலில் படைகளுக்கு இங்கு எந்த வேலையும் இல்லை. தற்போது சமாதானத்தையும் சகஜ நிலையையும் முன்னெடுத்துச் செல்வதற்கு தடையாகப் படையினர் உள்ளனர். எனவே படையினரை பொறுத்தவரையிலும் அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும் பாரிய மனமாற்றம் ஏற்பட்டாலொழிய சமாதானத்தை நாம் முன்னெடுத்துச் செல்ல முடியாதிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

(க)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.11.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.